Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | தை 04 | 17-01-2005 | திங்கட்கிழமை | ஓசை -334


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11120)

# பாரிய சர்வதேச உதவிகள் அரசாங்கத்தால் தமிழ்மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை!

## சர்வதேச சமூகத்திடம் உடனடி உதவிகளை பெற்றுக்கொள்ள முனைகிறோம்-சு.ப.தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

**இப்போதுள்ள உடனடிப் பிரச்சினை பாரிய சர்வதேச உதவிகள் எமது தாயகப் பிரதேசத்திற்கு தரப்படுவதாகவோ பகிர்ந்தளிக்கப்படுவதாகவோ இல்லை என்பதுதான். இதற்கு அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் இதுவரை இல்லை. இதனால் சர்வதேசத்துடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு உடனடியாக உதவிகளைப் புரிய முன் வரவேண்டும் எனக் கோரி வருகின்றோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று இடம்பெற்ற ஐ.நா உலக உணவுத் திட்டப் பணிப்பாளருடனான சந்திப்பின் பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று (ஞாயிறு) உலக உணவு ஸ்தாபனத்தின் தலைவரை நாங்கள் சந்தித்தோம். ஐ.நா அமைப்பினுடைய மிகமுக்கியமான அங்கமான உலக உணவுத்திட்டத்தின் தலைவர் என்ற வகையில் அவரது சந்திப்பு மிகவும் முக்கியமானது. அந்தவகையில் நாங்கள் தற்போது ஏற்பட்டுள்ள இயற்கை பேரனர்த்தத்தால் பெரும் அழிவைச சந்தித்துள்ள எங்கள் தாயகப் பிரதேசத்தில் மக்களுக்கான உடனடி நிவாரணப் பணிகள் அதைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகள் நினைவு நாள் தமிழீழப்பிரதேசமெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

வங்கக்கடலில் காவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் பன்னிரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று தமிழீழப் பிரதேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

தீருவில் பகுதியில் பொது மைதானத்தில் அனுஷ்டிக்கப்பட்ட இந் நினைவு நிகழ்வின் பொதுச் சுடரினை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா அவர்கள் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ கடற்படையின் துணைத தளபதி செழியன் அவர்கள் ஏற்றினார். தொடர்ந்து கடலில் காவியமான பத்து மாவீரர்களின் நினைவாக அமைக் கப்பட்ட நினைவாலயத்திற்கு வடமராட்சி அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் அன்பு மலர் மாலை அணிவிக்க பத்து மாவீரர்களினதும் நினைவுக்கற்களுக்கு கடற்தொழிலாளர்


(12ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் நினைவு நிகழ்வில் படையினர் அடாவடி

மன்னார் அரசியல் துறையினர் க.கா.குழுத் தலைவருக்குக் ..தம்

கேணல் கிட்டு அவர்கள் உட்பட பத்து மாவீரர்களின் 12 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மக்களது உணர்வு கலந்த நினைவு நிகழ்வை மன்னார் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மன்னார் நகர பஸ்தரிப்பு நிலையம், பேசாலை ஆகிய பிரதேசங்களில் மக்களால் முன்னெடுக்க முற்பட்டவேளை இதனைத் தடுத்து நிறுத்த இராணுவமும், பொலிசாரும் கனரக ஆயுத தளபாடங்களுடன் குறிப்பிட்ட இடங் களில் குவிக்கப்பட்டமை மக்களை உளரீதியாக பயமுறுத்தி அவர்க ளது உணர்வுகளை, உரிமைகளை மதிக்காத செயலை நாம் வன்மை யாகக் கண்டிப்பதுடன் எமது அதிருப்பதியையும் தெரிவிக்கின்றோம் என மன்னார் மாவட்ட அரசியல்து றையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்

(12ஆம் பக்கம் பார்க்க)



*கேணல் கிட்டு பீரங்கிப் படையணி, லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி போராளிகளால் நடத்தப்பட்ட நினைவு நிகழ்வில் ...*

## புலிகளின் விமான ஓடு பாதையில் இரு சிறிய விமானங்கள் நின்றனவாம்

- இணையத்தளச் செய்தி தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் வன்னியில் முன்னர் அமைத்த விமான ஓடுபாதையை விட இன்னொரு - புதிய - ஓடுபாதையை தற்போது அமைத்துள்ளார்கள் என்றும் அந்த ஓடுபாதையில் இரண்டு விமானங்கள் தரித்து நின்றதை விமானப்படையின் ஆளில்லா விமானம் படம்பிடித்துள்ளது என்றும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று தெரிவிக்கிறது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த புதன்கிழமை வன்னிவான் பரப்புக்கு மேலாகப் பறந்த சிறிலங்கா விமானப்படையின் இஸ்ரேல் தயாரிப்பு ஆளில்லா உ.ளவு விமானம் இரணைமடுக் குளத்துக்கு அண்மையில் புலிகள் புதிய விமான ஓடுபாதையை அமைத்துள்ளதை அவதானித்துள்ளதாக வவுனியாவில் உள்ள விமானத்தின் கட்டளை மையம் இனம் கண்டுள்ளது என்றும் -

சரக்கு ஏற்றி இறக்கும் சி-130 ரகவிமானம் கூட இந்த ஓடுபாதையில் எந்தப்பிரச்சினையும் இன்றி தரையிறங்கிச் செல்லக்கூடிய வகையில் இந்த விமான ஓடுபாதை வசதியாக அமைக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது..

இந்த விமான ஓடுபாதையில் ஒருவர் ஓட்டக் கூடிய ஆறு ஆசனங்கள் கொண்ட சிறியரக விமானம்

(12ஆம் பக்கம் பார்க்க)

### -நிவாரணப் பொருட்கள் மீது -

## சுங்கப் பரிசோதனை இன்மையால் பாதுகாப்பு பிரச்சினையாம்

இலங்கைக்கு வரும் நிவாரண உதவிகள் தொடர்பில் சுங்கப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமை காரணமாக பாதுகாப்பு பிரச்சினை எழுந்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் நிவாரண உதவிகள் அனைத்தும் சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை. எனவே இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இவற்றின் மூலம் ஆயுதங்களும் நவீன தொலைத்தொடர்பு கருவிகளும் கிடைக்கும் வாய்ப்பிருப்பதாக படைத் தரப்பு அச்சம் வெளியிட்டுள்ளது. இதேவேளை படையினரின் இந்தக் குற்றச்சாட்டானது வடக்கு கிழக்குக்கு நேரடியாக வரும் உதவிகளை குறைக் கும் நடவடிக்கையாகவே அமைந்துள்ளதாக தமிழர் தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (32)

### அமெ. கடற்படையினர் யாழ்.இற்குச் செல்வார்கள்

இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்க கடற்படையினரின் ஒரு பிரிவினர் எதிர்வரும் வாரத்தில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளனர். 15 பேரைக்கொண்ட மருத்துவத் துறையை சேர்ந்த இவர்கள் பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் மருத்துவ முகாம்களை நடத்தவுள்ளனர். ஏற்கனவே வடக்கு பகுதிகளில் தமது நிவாரணப்பணிகள் இடம் பெறுவது குறித்து அமெரிக்கா

(12ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை பொங்கு தமிழ் நிறைவு நிகழ்வில் மாவீரர் நினைவாலயத்திற்கு அடிக்கல் நாட்டல்

பொங்கு தமிழின் 4 ஆம் ஆண்டு நிறைவு தின நிகழ்வை முன்னிட்டு இன்று மாவீரர் நினை வாலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட உள்ளது. பொங்கு தமிழின் 4 ஆம் ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக்குமார் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக யாழ் பல்கலைக்கழக வளாகத்துக்குள் மாவீரர் நினைவாலயம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட உள்ளது. இப் பொங்குதமிழ் 4 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் துறையினர், பேராசியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பெரும் திரளானோர் கலந்து கொள்ளவுள்ளனர். (36,41)

முல்லைத்தீவு செயலகத்தில்

# ஐ.நா அமைப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்பில்

# கடற்றொழிலாளர்கள் சார்பில் 10 கோரிக்கைகள்

சுனாமி அனர்த்தம் தொடர்பாக ஐ.நா பிரதிநிதிகளுடனான சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 9.30 மணிக்கு முல்லை. கச்சேரி மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றது. இதில் கடற்றொழிலாளர் சார்பில் 10 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

உதவி அரசாங்க அதிபர் தலைமைப்பீட அதிகாரி செல்வி. ப.ஆரணி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழ கடற்படைத் சிறப்புத் தளபதி கேணல் சூசை, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா, தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த சின்னப்பா மாஸ்டர் ஆகியோர் கடற்றொழிலாளர்களின் முன்னைய சிறப்பான வாழ்க்கை தொடர்பாகவும், பின்னர் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவு சுனாமி அனர்த்தம் தொடர்பாகவும், புள்ளி விபர ரீதியாக எடுத்துக் கூறினர். அத்துடன் கடற்றொழிலாளர் சார்பில் 10 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இவற்றைக் கொள்கையளவில் ஏற்பதாக ஐ.நா பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தேவையான மீன்பிடி வலைகளும், படகுகளும் படகு கட்டுகின்ற இடங்கள் (திருத்தும் நிலையமும்) இந்த பிராந்தியத்திற்கு பொருத்தமான வலை உற்பத்தி ஆலை இயந்திரங்களின் வழங்கல், திருத்த நிலையங்கள் அமைத்தல், மீன்பிடி இறங்குதுறை, படகுகள், வள்ளங்கள் கட்டுவதற்கான வசதிகள், குளிரூட்டப்பட்ட அறை வசதிகள், ஐஸ்த் தொழிற்சாலைகளும் வெளிச்சவீடு, மீன்பிடித் தொழில் சார் பயிற்சி,கல்வி புதிய மீன்பிடி முறைகளின் அறிமுகம்.

இந்த 10 விடயங்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும் மற்றும் படகுகளின் இயந்திரங்களின் இழப்புக்களையும் மக்களிடம் நேரடியாக கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்று கேணல் சூசை கேட்டுக்கொண்டுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளான தயாபரன், கென்றி குணவர்தனா, குளாட்டு பெர்ணாண்டோ ஆகியோரும் முல்லை மாவட்ட அரசஅதிபர் திருமதி இமெல்டா- சுகுமார், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (20)

## முல்லைத்தீவில் கட்டட இடிபாடுகளிலிருந்து இரு சிறுவர் உட்பட ஐவரின் உடல்கள் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவில் சுனாமி அலைத் தாக்கத்தால் உயிரிழந்த ஐந்து பேரின் உடல்கள் நேற்று மீட்கப்பட்டன.

அனர்த்தம் ஏற்பட்டு 21 நாட்களை கடந்த நிலையில் தொடர்ந்தும் முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து உயிரிழந்தவரிகளின் உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றது. நேற்று முல்லைத்தீவு வண்ணாங்குளம் பகுதியிலிருந்து சிறுவர்களின் உடல்கள் இரண்டும் பெண்களின் உடல்கள் மூன்றுமாக ஐந்து உடல்களும் சிதைவடைந்த நிலையில் மீட்கப்பட்டது. கட்டட இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள வேளையிலேயே இவ் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதோடு ஐந்து உடல்களும் ஒரே இடத்தில் இருந்தே மீட்கப்பட்டு எரியூட்டப்பட்டதோடு இடிபாடு. களை அகற்றும் பணி தொடர்ந்தும் நடை பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச,20)

### கடல் வள ஆசிரியர்களுக்கான வேண்டுகை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் கடல் வள தொழில் நுட்பப் பாடத்தினை கற்பித்துக் கொண்டிருந்தாக ஆசிரியர்கள் 1ஆம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இடைவிடாது தொடர்ச்சியாக பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடடில் ஈடுபடுமாறும் அத்துடன் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட இருப்பதால் கொடுப்பனவுக்குரிய மாதாந்த வரவை உறுதிப்படுத்திய கடிதத்துடன் 21.01. 2005 அன்று பி.ப 2.00 மணிக்கு யாழ்.மாவட்ட கல்வி மேம பாட்டு பேரவை அலுவலகத்தில் (யாழ். கல்வி வலயம்) தவறாது சமூகம் தரும்படி தமிழீழ கல்விக் கழகம் கேட்டுக்கொள்கிறது. (41)

## ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் களஞ்சிய வசதியின்மையால் சிரமம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் களஞ்சிய வசதியின்மையால் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒட்டுசுட்டான் பகுதியில் கமநல சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டது. ஆனால் களஞ்சிய வசதியின்மையால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

விவசாய உள்ளீடுகளைப் பெற வேண்டுமானால் முத்துஐயன் கட்டு இடது கரையில் உள்ள களஞ்சியப் பகுதிக்கே செல்ல வேண்டியுள்ளது.

இங்கு செல்வதானால் 5-6 கிலோமீற்றர் தூரம் சென்று எடுத்து வரவேண்டியுள்ளதால் ஒட்டுசுட்டான், சம்மளங்குளம், கற்சிலைமடு, கருவேலன்கண்டல்,, கூளாமுறிப்பு, புளியங்குளம் பகுதி மக்கள் தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (05)

## முல்லைத்தீவு நகரப்பகுதியூடான பேருந்துப்பணி மீண்டும் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு நகரப் பகுதியினூடான பேருந்துப்பணி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட தையடுத்து சுனாமியால் பாதிக்கப்படாத பகுதியைச் சேர்ந்த பெரு மளவான மக்கள் முல்லைத்தீவிற்குச் சென்று அழிவுற்ற பகுதிகளைப்பார்வையிட்டு வருகின்றனர்.

சுனாமி அலையினால் முல்லை நகர் முற்றாக அழிக்கப்பட்டதோடு அப்பகுதியினுடான பேருந்துப் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தது இப்பணி நேற்று முன்தினம் தொடக்கம் மீண்டும் ஆரம்பமானது (ச)

## காலபோக பயிர்செய்கை கட்டாக்காலிகளால் அழிவு

ஒட்டுசுட்டான் பிரதேச காக்கை பணிக்கன்குளம் கிராமத்தில் கட்டாக்காலி எருமை மாடுகளால் பெரும் தொல்லை ஏற்பட்டுள்ளது. அண்மைக்காலமாக இப்பகுதியில் எருமை மாடுகளை இரவிலும் பட்டிகளில் அடைப்பதில்லை இதனால் சின்னசாளம்பன் காக்கை பணிக்கன் குளம், பெரிய சாளம்பன் பகுதிகளில் காலபோக பயிர்ச் செய்கையினை மேற்கொண்ட விவசாயிகளின் பயிர்களை அழித்துள்ளது. (05)


வரி விளம்பரம்

**மரக்கன்றுகள் விற்பனைக்கு!**

நல்லின சவுக்கு மரக்கன்று விற்பனைக் குண்டு. (கன்றின் விலை15/=) தொடர்புகளுக்கு:- முகாமையாளர், நாற்று உற் பத்தி மையம், கனகாம்பிகை அம்மன் கோவிலடி, இரணை மடு. (5557)

**இறப்பர் முத்திரை**

கிளிநொச்சியில் பொலிமர் றபர்ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவை களை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி. T.P.021-2285750 (சி-11181)

**வீடியோ மிக்சிங் பிரியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

இந்திய மேலைத்தேய உருவாக்கத்தில் அமைந்த
Video Effects (Pinnacle, canopus)
Video Background DVD

விற்பனைக்கு

இவை அனைத்தும் அண்மைய வெளியீடுகள் ஆகும்.
தொடர்புகளுக்கு 0777917610

(5361)


## சாவு அறிவித்தல்

### சின்னத்துரை துரைராசா

முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சொந்த முகவரியாகக்கொண்ட சின்னத்துரை-நாயகம் தம்பதிகளின் அன்பு மகனுமாகிய சின்னத்துரை-துரைராசா அவர்கள் கடந்த 26.12.2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது தாக்கப்பட்டு வவுனியாவில் சிகிச்சை பெற்று வந்தபோது 15.01.2005 காலமானார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், தங்கலட்சுமியின் சகோதரனும், இராசமாணிக்கத்தின் மைத்துனரும் ரவிகரன், நந்தினி (லண்டன்), குமுதினி, ஜெயந்தினி காலஞ் சென்ற சீதாலட்சுமி, செந்தூர்ச்செல்வன், சுபாஸ்கரன், சுதாகரன், வினோதினி அவர்களின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரி (வைத்தியசாலை, முல்லைத்தீவு), சிவலிங்கம் (லண்டன்), தேவராசா, அரசரத்தினம், ஜெயப்பிரகாஸ், ரூபமாலா,சுஜீபா (பல்கலைக்கழகம், மட்டக் களப்பு), த.பிரபாகரன், சுபேந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

இவருடைய ஈமக்கிரியைகள் 2005.01.17 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் வட்டுவாகல் இந்து மையானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து.ரவிகரன்,
முல்லைத்தீவு.

(5095)

## காணவில்லை

### சிவ ஜெயந்தன் - அபிஷேகன்

(8 வயது ஆண்)

கோயில் குடியிருப்பு-முல்லைத்தீவு



சுனாமி அனர்த்தத்தின் பின் முல்லைத்தீவிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கிளிநொச்சி மகாவித்தியால நலன்புரி நிலையத்தில் விடப்பட்ட பின் யாரோ ஒரு நபரால் தவறுதலாகவோ அல்லது பராமரிப்பதற்காகவோ கூட்டிச் செல்லப்பட்டுள்ளார். இவரைக்கூட்டிச் சென்றவர்கள் தாயையும் இழந்து தவிக்கும் இவரது 4 வயது தங்கையாரினதும் மேற்படி சிறுவனினதும் மன நிலையைக் கருத்திற் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் இச் சிறுவனை கீழ்க் காணும் முகவரிகளுடன் தொடர்புகொண்டு ஒப்படைக்கும் வண்ணம் தயவுடன் வேண்டிநிற்கிறோம்.

**இவரை ஒப்படைப்பவர்களுக்கு அல்லது இவர் பற்றிய சரியான தகவலை முதல் தருபவர்களுக்கு ரூபா 1 இலட்சம் சன்மானம் தரப்படும் (100,000)**

சி.சிவஜெயந்தன்,
(தகப்பன்)
கச்சேரி,
முல்லைத்தீவு.

எஸ்.ஜெயகணேஷ்,
நெக்கொட் அலுவலர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.
0776540663,
021-2223625

*Dr. சி.*சிவமோகன்,
அபிஷா தனியார்
வைத்தியசாலை,
வவுனியா.
024-2224574
0777237143
024-2221474

(5563)

# இருதரப்பிலும் போர் நிறுத்தம் அவசியமானது

## பலஸ்தீன புதிய தலைவர் அப்பாஸ் வலியுறுத்து

(ரமல்லா)

**இஸ்ரேல் அல்லது பலஸ்தீன குழுக்களில் யார் வன்முறையில் ஈடு பட்டாலும் அது கண்டிக்கத்தக்கது. இரு தரப்பிலும் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டியது அவசியம் என பலஸ்தீனத்தின் புதிய தலைவராக பதவியேற்ற முகமது அப்பாஸ் தெரிவித்துள்ளார்.**

பலஸ்தீனத்தின் புதிய தலைவராக முகமது அப்பாஸ் முறைப்படி சனிக்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார். பலஸ்தீன மக்களின் நலன் காப்பேன் என அவர் குரான் மீது கையை வைத்து உறுதி கூறினார்.

யசீர் அரபாத்தின் மறைவுக்குப் பிறகு அப்பாஸ் இப்பொறுப்பை ஏற்றார். இஸ்ரேல் அல்லது பலஸ்தீன குழுக்களில் யார் வன்முறையில் ஈடுபட்டாலும் அது கண்டிக்கத்தக்கது. இரு தரப்பிலும் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டியது அவசியம் என பலஸ்தீனத்தின் புதிய தலைவராகப் பதவியேற்ற முகமது அப்பாஸ் தெரிவித்தார். பலஸ்தீனர்களிடம் நிலைமையை எடுத்துச்சொல்லி விளக்குவேன். அமெரிக்கா தயாரித்து அளித்துள்ள அமைதித் திட்டத்தை அமுல்படுத்துவதில் உறுதியாக இருக்கிறேன்.

இஸ்ரேலுடன் கூடிய விரைவில் பேச்சுவார்த்தையைத் தொடங்க விரும்புகிறேன் என்றார் அப்பாஸ்.

பதவி ஏற்புக்கு முன் தினத்திலிருந்து அப்பாஸுடன் தனது தொடர்பை இஸ்ரேல் துண்டித்துக் கொண்டது. தீவிரவாதிகளை ஒடுக்கினால் தான் இனி பேச்சு என இஸ்ரேல் கூறிவிட்டது.



பலஸ்தீனப் போராளிகள் மீது தாக்குதலை தீவிரமாக்குமாறு இஸ்ரேல் பிரதமர் இராணுவத்திற்கு அறிவித்த நிலையில் வாராந்த கூட்டமொன்றில் உரை நிகழ்த்த வந்திருக்கும் அவருக்கு பாதுகாப்பளிக்கும் இஸ்ரேல் இராணுவத்தினர்.



பண்டாஆசே விமான நிலையத்தில் ஜெர்மனிய இராணுவ மருத்துவருக்கு மரியாதை செலுத்தும் இந்தோனேசிய இராணுவச் சிப்பாய்.

## நிலநடுக்கம்

(டாக்கா)

பங்களாதேஷத்திலும் தாய்வானிலும் சனிக்கிழமை நில நடுக்கம் ஏற்பட்டது. ஆயினும் அதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

தென்கிழக்கு பங்களாதேஷத்தில் சனிக்கிழமை காலையில் நில நடுக்கம் ஏற்பட்டது. துறைமுக நகரமான சிட்டகொங்கிலும் அந்த அதிர்வு உணரப்பட்டது. 20 வினாடிகள் நீடித்த அந் நில நடுக்கத்தின் திறன் ரிக்டர் கருவியில் 4.4 எனப் பதிவாகியுள்ளது.

தாய்வானின் வடகிழக்குப் பகுதியில் சனிக்கிழமை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் திறன் ரிக்டர் கருவியில் 0.1 எனப் பதிவாகியிருந்தது.

## சுனாமி ஆழிப்பேரலைக்கு பலியானோர் தொகை 1.63.370

(ஜகார்த்தா)

கடந்த மாதம் 26ஆம் திகதி இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமியில் சிக்கி இதுவரை 1,63,370 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேசியாவில் மட்டும் 1,10,229 பேர் உயிரிழந்துள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 12,132. தாய்லாந்தில் 5 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதையடுத்து இறந்தோர் எண்ணிக்கை 5318 ஆக உயர்ந்துள்ளது. இது வரை 3199 பேரைக் காணவில்லை என அந் நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்துக்குச் சுற்றுலா வந்த வெளிநாட்டுப் பயணிகளில் 2171 பேர் பேரலையில் சிக்கி உயிரிழந்தனர். இலங்கையில் 30920 பேர் உயிரிழந்துள்ளனர். 6,034 பேரைக் காணவில்லை. மியான்மாரில் 59பேரும், மாலைதீவில் 82 பேரும் மலேசியாவில் 68 பேரும், பங்களாதேஷில் 2 பேரும் சுனாமியில் சிக்கி இறந்துள்ளனர்.

அதே போல் ஆபிரிக்க நாடுகளில் சோமாலியாவில் மட்டும் 298 பேர் இறந்துள்ளனர். தான்சானியாவில் 10 பேரும், கென்யாவில் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக அந்தந்த நாடுகள் உறுதி செய்துள்ளன.

## சுனாமி முன்னெச்சரிக்கைத் திட்டம்

## 169 கோடி செலவில் நிறுவ அமெரிக்கா முடிவு

(வோஷிங்டன்)

சுனாமி முன்னெச்சரிக்கைத் திட்டத்தை பசுபிக் மற்றும் அத்லாண்டிக் பெருங்கடல் பகுதிகளில் ரூ.169 கோடி செலவில் விரிவுபடுத்த அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

உலக புவி ஆய்வு அமைப்பின் மூலமாக இது செயற்படுத்தப்படும். இந்த அமைப்பில், சுனாமி பேரலைத் தாக்குதலால் பேரழிவைச் சந்தித்த இந்தியா, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளும் அண்மையில் சேர்ந்துள்ளன. அவற்றோடு சேர்த்து 54 நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன.

இத்திட்டப்படி, பூகம்பம் போன்றவற்றால் கடலில் உருவாகும் சுனாமி பேரலைகளை முன் கூட்டியே கண்டுபிடிக்கவும் அது குறித்து எச்சரிக்கை செய்யவும் அதிநவீனமான 32 கருவிகள் பசுபிக், அத்லாண்டிக் பெருங்கடல் பகுதிகளில் அமெரிக்கா நிறுவும். அமெரிக்க தேசிய கடல்சார் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பு அவற்றை அமைக்கும். இத்திட்டம் 2007, ஜூனுக்குள் நிறைவேற்றப் பட்டு விடும்.

சுனாமி கண்காணிப்பை மேலும் திறமையாக மேற்கொள்ளவும், அபாயம் உருவானால், அதைக் கண்டுபிடித்து விரைவாக எச்சரிக்கை செய்யவும் அந்த விரிவாக்கத் திட்டம் உதவும் என்று அமெரிக்க அதிபர் புஷ்ஷின் அறிவியல் ஆலோசகர் ஜான் மர்பர்ஜர் வெள்ளிக்கிழமை நிருபர்களிடம் தெரிவித்தார்.

## உலகளவில் பிரிட்டன் பொலிசார் திறமையற்றவர்களாக மாறிவிட்டனர்

### - ஆய்வு ஒன்றில் தெரிவிப்பு

(லண்டன்)

உலகளவில் பிரிட்டன் பொலிசார் திறமையற்றவர்களாக மாறிவிட்டனர். முன்பு இருந்ததைவிட குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதே இதற்குச் சான்று என ஆய்வு ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

பிரிட்டன் பொலிசாரின் செயற்பாடு குறித்தும் குற்றங்களின் தன்மை குறித்தும் 'சீவிடாஸ்' என்ற அமைப்பு ஒரு ஆய்வு நடத்தியுள்ளது. அந்த ஆய்வு அறிக்கையில் கூறியிருப்பதாவது;

கடந்த சில காலமாக பிரிட்டன் பொலிசார் அலுவலகத்தில் அமர்ந்தபடி பணியாற்றவே விரும்புகின்றனர். குற்றங்களில் ஈடுபடுபவர்களை எதிர் கொள்வதையும், குற்றங்கள் நடக்காமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதிலும் அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. உலகளவில் திறமையற்ற பொலிசாராக பிரிட்டன் பொலிசார் உள்ளனர் என்று சொல்லும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது. இதனால் பிரிட்டனில் உள்ள கிரிமினல்களுக்குக் குற்றங்களில் ஈடுபடுவது மிக எளிதாகிவிட்டது.

இதேபோன்றதொரு நிலைமை அமெரிக்கா, பிரான்ஸ்,ஜெர்மனி ஆகிய நாடுகளில் கடந்த 1960ஆம் ஆண்டுகளில் உருவானது. ஆனால் அந்த நாடுகளில் உள்ள பொலிசார் திறமையாக செயற்பட்டு குற்றங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி விட்டனர். ஆனால் பிரிட்டன் பொலிசார் அதுபோல குற்றங்கள் நடக்காமல் தடுப்பது, கீழ் மட்ட அளவில் உள்ள ஒழுங்கீனத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவது, சமூகவிரோத செயல்களை மட்டுப்படுத்துவது போன்றவற்றில் அக்கறையில்லாமல் உள்ளனர்.

பிரிட்டனில் குற்றங்கள் அதிகரித்துள்ள போக்கு விசித்திரமாக உள்ளது. அதற்கான காரணத்தைப் புரிந்து கொள்வதும் சிரமமாக உள்ளது. கடந்த காலங்களை ஒப்பிடும் போது பிரிட்டனில் குற்றங்கள் குறைவாகவே நடக்கின்றன என்று உள்துறை கூறுவது தவறான தகவல். தொடர்ந்து நடக்கும் குற்றங்களால் மக்கள் துன்புறும் நிலையும், சமூகத்தில் உள்ள மக்கள் பிளவுபட்டிருக்கும் சூழ்நிலையுமே உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுனாமி பூகம்ப அலையால் தனது மனைவி பிள்ளைகளை இழந்த இந்தோனேசிய வாசி ஒருவர் தனது இருப்பிடத்தில் கூடாரம் ஒன்றை அமைக்கிறார்.

## சுனாமி தகவல் திரட்டு தளம் அமைக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் முடிவு

(பானாஜி)

சுனாமி தாக்குதல் குறித்து அறிய தகவல் திரட்டும் தளம் ஒன்றை அமைக்க இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) முடிவுசெய்துள்ளது. இது குறித்து இஸ்ரோ தலைவர் தெரிவிக்கையில்;

நாட்டின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களில் ஒன்றான இஸ்ரோவுக்கு சுனாமி குறித்து தகவல் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். எனினும், சுனாமி பாதிப்பு ஏற்பட்ப்போகிறது என்பதை சில மணி நேரத்திற்கு முன் அறிந்து, மக்களை எச்சரிக்கத் தகவல் திரட்டு தளம் ஒன்றை அமைக்க இஸ்ரோ முடிவுசெய்துள்ளது.

சுனாமி அலைகள் எந்தப் பகுதியைத் தாக்கும் என்பதை மனிதர்களால் முன் கூட்டியே அறிய முடியாது. எனினும், கடலில் தகவல் திரட்டும் தளம் அமைப்பதன் மூலம் சுனாமி உருவாவதை அறிய முடியலாம். சுனாமி என்பது எதிர்பாராத ஒன்று என்பதால் அதை எதிர்கொள்ள நாங் கள் முன் கூட்டியே தயாராக இல்லை. ஒரு நூற்றாண்டில் மிக அரிதாக ஒருசில நேரங்களில் தோன்றும் சுனாமியை உடனடியாக செயற்கைக் கோளும் கண்டுபிடிக்க முடிய வில்லை. உருவாகும் இடத்தில் சுனாமி அலைகளின் உயரம் மிகக் குறைவாக இருப்பதே இதற்குக் காரணம். இதையும் மீறி சுனாமி அலை உருவாவதை அறிந்தாலும் அந்த அலைகள் எந்தந்தப் பகுதியில தாக்கு தலை நடத்தும் என்பதைக் கணிக்கமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.



சுனாமி தாக்குதலில் பாதிப்புற்ற பண்டா ஆசே நோக்கி வருகை தந்த ஜப்பானிய மருத்துவக் குழுவினர் தனது விமானத்தின் முன் கூடியுள்ளனர்.

# ஆழிப்பேரலையால் மட்டு.,அம்பாறை மாவட்டங்களில் 2071 மாணவர்கள்,118 ஆசிரியர்கள் உயிரிழப்பு!

## 25 பாடசாலைகள் முற்றாகச் சேதம்

(மட்டக்களப்பு)

**சுனாமி கடல் அனர்த்தத்தால் மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களில்2,071 மாணவர்களும்118 ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளதாக இதுவரை மேற்கொள் ளப்பட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. மேலும் 78 பாடசாலைகளும் சேதமடைந் துள்ளன. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் ஆழிப்பேரலை காரணமாக சுமார் 50 ஆயிரம் மாணவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.**

இவர்களில் சுமார் 50 சதவீதமான மாணவர்கள் உயிரிழப்புக்களையும்,உடமை இழப்புக்களையும் நேரடியாக சந்தித்துள்ளதாக கல்வித் திணைக்கள மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இந்த மாணவர்களில் கூடுதலானவர்கள் அம்பாறை மாவட்டத்திலேயே பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதாவது கல்முனை கல்வி வலயத்தில் மட்டும் பாதிக்கப்பட்டுள்ள 12 ஆயிரம் மாணவர்களில் 7,800 மாணவர்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளார்கள். இதனைத் தவிர இந்த இரண்டு மாவட்டங்களிலும் 2,071 மாணவர்களும் 118 ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளதாக இதுவரை மேற்கொள் ளப்பட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இந்தத் தொகையும் கல்முனை கல்வி வலயத்திலேயே அதிகமாக உள்ளது. விபரங்கள் வருமாறு:- கல்முனை கல்வி வலயம் மாண வர்கள் - 1502 ஆசிரியர்கள் - 105சிற்றூழியர்கள் - 02 சம்மாந்துறை கல்வி வலயம் (கரையோர பிரதேசம் அல்ல) மாணவர்கள் - 02, ஆசிரியர்கள் - 02, பொத்துவில் கல்வி வலயம் மாணவர்கள் - 192,ஆசிரியர்கள் - 02என மொத்தம் அம்பாறை மாவட்டத்தில் 1,696 மாணவர்களும் 109 ஆசிரி யர்களும் உயிரிழந்துள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் 397 மாணவர்கள், 15 ஆசிரியர்கள். ஒரு கல்வி சாரா ஊழியர் என கல்வித்துறை-யில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள் ளன. விபரங்கள் வருமாறு:- மட்டக்களப்பு கல்வி வலயம் மாணவர்கள் - 235,ஆசிரியர்கள் - 06,சிற்றூழியர்கள் - 01 கல்குடா கல்வி வலயம் மாணவர்கள் - 125,ஆசிரியர்கள் - 02 பட்டிருப்பு கல்வி வலயம் மாணவர்கள் - 15, ஆசிரியர்- 01 இதனைத் தவிர அம்பாறை மாவட்டத்தில் 40 பாட சாலைகள் சேதமடைந்துள்ளன. இதில் 25 பாடசாலைகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. மட்டக்களப்பு மாவட் டத்தில் 38 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இதில் 13 பாடசாலைகள் பகுதியாக சேதமடைந்துள்ளன. முற்றாக சேதமடைந்துள்ள பாடசாலைகளை தற்காலிகமாக கொட் டகை அமைத்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளில் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள்.

# சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்க ஏற்பாடு

(முல்லை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பகுதிக்கான சுத்திகரித்து வடிகட்டப்பட்ட நீரை மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையினை போறூட் நிறுவனம் எடுத்துள்ளது.

உண்ணாப்பிலவு வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பொதுக்கிணற்றிலிருந்து நீரை சுத்திகரித்து வடிகட்டி மக் களுக்கு பவுசரில் வழங்கப்பட்டுவருகின்றது.

ஒரு நாளைக்கு சராசரி 25 ஆயிரம் லீற்றர் தண்ணீர் விநியோகிக்க இருப்பதாக போறூட் நிறுவன இணைப் பாளர் குணாளன் தெரிவித்தார். நீரை சுத்திகரிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட இயந்திரம் ரூபா 30 இலட்சம் பெறு மதி எனவும் தொடர்ச்சியாக முல்லைத்தீவுப் பகுதி மக்க ளுக்கு குடிநீர் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (20)

# மாங்குளம் தபாலகத்திற்கு அடிப்படை வசதிகள் வேண்டும்

மாங்குளம் தபாலகம் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற வகையில் கடைக்கட்டடத்தில் நீண்ட காலமாக செயற்பட்டு வருகிறது.

1990 ஆம் ஆண்டு இப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தபாலகம் முற்றாக அழிந்தது. அதனையடுத்து மாங்குளத்தில் தனியார் கட்டடத்தில் இயங் கிய போதிலும் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக் கைகளினால் இத் தபாலகம் வவுனிக்குளம், யோகபுரம் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தது.

மீளவும் இத்தபாலகம் மாங்குளத்தில் எவ்வித அடிப்படை வசதிகளுமற்று தற்போது செயற்பட்டு வருகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர் கொள்ள நேரிடுகிறது. (45)

# சிறிலங்கா அரசும் அதன் படைகளும் தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்றன

## - மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி

இராணுவமும், சிறிலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளை கொச்சைப்படுத்த வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக சிறுவர்களைப்படையில் சேர்க்கின்றனர் என்று கூறி தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப் படுத்துகின்றனர்.

இவ்வாறு அம்பாறை தம்பிலுவில் அரசியல் துறை காரியாலயத்தில் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற யுனிசெப் பிரதிநிதிகளுடனான ஒன்று கூடலில் கலந்து கொண்ட தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார். அவர் தொடர்ந்து தனதுரையில் குறிப்பிடுகையில், தமிழீழ விடுதலைப்புலிகள் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான துயர்துடைப் புப் பணிகளை மேற்கொண்டிருந்த வேளையில் இவ்வாறான குற்றச் சாட்டு எம்மீது சுமத்தப்பட்டுள்ளதை நாம் முற்றாக மறுக்கின்றோம். தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்தமட்டில் 18 வயதுக்குட் பட்ட சிறுவர்களை எமது அமைப் பில் சேர்ப்பதில்லை என்பதில் நாங் களும் எமது தலைமைப்பீடமும் உறுதியாக உள்ளோம் என்றார். இச்சந்திப்பில் போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழு மற்றும் யுனிசெப் பிரதிநிதிகளும் கலந்து கொண் டனர்.

# இலங்கைவங்கி பிரதிநிதிகள் முல்லைத்தீவுக்கு விஜயம்

(முல்லை)


இலங்கைவங்கி பிரதிநிதிகள் முல்லைத்தீவிற்கு விஜயம் செய்து பார்வையிட்டதுடன் மாவட்ட அரச அதிபர் செயலகத்திற்கு வருகை தந்து பிரதம கணக்காளருடன் கலந்துரையாடிச் சென்றனர்.

வடமாகாண இலங்கை வங்கி முகாமையாளர் அருமை நாயகம், வடமாகாண இலங்கைவங்கி உதவி முகாமையாளர் பாலசுப்பிரமணியம், இலங்கைவங்கி வன்னிப் பிரதேச முகாமையாளர் ஜயம் பெருமாள்,முல்லைத்தீவு இலங்கை வங்கி முகாமையாளர் ஆகியோர் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# மட்டக்களப்பு ரெலிக்கொம்மிற்கு சுனாமி பேரலைகளால் இழப்பு

சுனாமி பேரலைத் தாக்கம் காரணமாக மட்டக்களப்பில் சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திற்கு சுமார் 2இலட்சம் ரூபா வரை சேதம் ஏற் பட்டுள்ளதாக மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ தகவல் பிரிவு தெரிவித்துள்ளது.

மாவட்டத்தின் பிரதான பரிவர்த்தனை மையங்களான மட்டக்களப்பு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், வாழைச்சேனை ஆகியவற்றின் இணைப்புகள் சுனாமி பேரழிவால் முழுமையாக சேதமடைந்துள்ளன. பிள்ளையாரடியில் இருந்து நாவற்குடா வரையிலான 1500 இணைப் புக்களும் நாவற்குடாவில் இருந்து புதுக்குடியிருப்பு வரையிலான 500 இணைப்புகளும் கிரான்குளத்திலிருந்து கோட்டைக்கல்லாறு வரையில் 400 இணைப்புக்களும் தன்னாமுனையில் இருந்து சித்தாண்டி வரையில் 50 இணைப்புகளும் சித்தாண்டி வடக்கு வரையிலான பகுதியில் 100 இணைப்புகளும் முற்றாக சேதமடைந்துள்ளன.



'சுனாமி' கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங் களில் தங்கியுள்ள மக்களை உள்நாட்டு வெளிநாட்டு ஊடக வியலாளர்கள் சந்தித்து அனுபவங்களைப் பகிர்ந்து வருகின்றனர். நலன்புரி நிலைய பராமரிப்பில் ஈடுபட்டுவரும் பெண் போராளி ஒருவரிடம் ஐரிஸ் நாட்டு ஊடகவியலாளர் நேர்காணல் நடத்துகிறார். (படம்-அ.லோகீசன்)

# சுனாமியால் பெற்றோரை இழந்த 75 சிறார்கள் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதி

சுனாமி அனர்த்தத்தினால் பெற்றோரை இழந்த 75 சிறுவர்கள் அம்பாறை வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்களென்று வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் லங்காதிலக ஜயசிங்க தெரிவித் துள்ளார்.

மேற்படி சிறுவர்கள் வைத்தியசாலை ஊழியர் களால் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள் பெற்றோரை இதுவரை அடையாளம் காணாததால் பிள்ளை களுக்கு பலர் உரிமை கோரி வருகின்றார்களென்று அறிவிக்கப்படுகின்றது பெற்றோரைக் கண்டு பிடிப்பதற்காக சிறுவர்களின் புகைப்படங்களை நலன் புரி நிலையங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான ஒழுங் குகளை பணிப்பாளர் டாக்டர் ஜயசிங்க மேற்கொண் டுள்ளார்.

ஏற்கனவே பெற்றோரைப்பார்த்தவுடன் சிறுவர்கள் முகத்தில் காணப்பட்ட பிரதிபலிப்பை அடிப்படையாக வைத்து சில சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டு உரிய பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்களென்று அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

# முல்லை நகர் கிணறுகளின் நீரைப் பயன்படுத்த வேண்டாம்

முல்லைத்தீவு நகரப் பகுதியில் கடல் அனர்த்தம் ஏற்பட்டுள்ள இடங்களிலுள்ள நீரைப்பாவிக்க வேண் டாம் என்றும்,அதனை அண்டிய பகுதியில் உள்ள கிணற்று நீரை சுட வைத்த பின்பே குடிப்பதற்கு பாவிக்க வேண்டும் என்றும் முல்லைமாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் து.வி. ஜெயக் குலராஜா தெரிவித்தார். (20)

# ரொரன்ரோ கத்தோலிக்க கருதினால் பாதிப்புற்றோருக்கு 3.4 மில்லியன் டொலர் உதவி

கனடாவில் பெருமளவு தமிழர்கள் செறிந்து வாழும் ரொரன்ரோ மறைமாவட்டத்தின் கத்தோலிக்க ஆயர்களின் தலைமையாளரான கருதினால் அதி வண. அலோசியஸ் அம்புரோசிக் ஆண்டகை அவர் கள் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த தென் கிழக்காசிய மக்களுக்காக 3.4 மில்லியன் டொலர் களுக்கான காசோலையை கையளித்துள்ளார்.

ரொரன்ரோ மறைமாவட்டத்தின் அனைத்துக் கத்தோலிக்க மக்கள் சார்பாகவும் இந்தத் தொகையை வழங்குவதாகக் குறிப்பிட்ட கருதினால், அனைத்துப் பங்குகளும் இதற்கு தங்களது நிதியை வழங்கிய தாகக் குறிப்பிட்டார். ரொரன்ரோ பெரும்பாகத்திலுள்ள மக்களுடன் பாடசாலை மாணவர்களும் பெருமளவில் இந்நிதி சேகரிப்பில் கலந்து கொண்டதாகவும் தெரி வித்தார். செயர் லைஃப் (Share Life) என்றழைக்கப் படும் கத்தோலிக்க மறைமாவட்டங்களின் தொண்டர் சேவைகள் அனைத்திற்கும் நிதிசேகரிப்பிற்கும் பொறுப்பாகவுள்ள அமைப்பின் தலைவர் ரெறி தொம் சன்டி இந்த நிதி கையளிப்பின்போது உடனிருந்தார். பல நாடுகளின் கத்தோலிக்க மறைமாவட்டங்கள் இணைந்து ஏற்கனவே 60 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளதாகவும், ரொரன்ரோ மறைமாவட்டம் வழங்கும் 3.4 மில்லியன் டொலர்கள் பாதிக்கப்பட்ட



பகுதிகளை மீளக்கட்டியெழுப்பப் பெரிதும் உதவும் என்று தாம் நம்புவதாகவும் கருதினால் குறிப்பிட்டார். தொடர்ந்தும் நிதி அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்கள், www.sharelife.org அல்லது www.tamilmission.com போன்ற நிறுவனங்களினூடாக அல்லது அவர்களது இணையத்தளங்களூடாக வழங்குவதன் மூலம் கனேடிய வரிச் சலுகையை முழுமையாகப் பெற்றுக் கொள்ள லாம் என்றும், இவை தவிர ஏற்கனவே நிதி சேகரிக் கும் ஏனைய சமூகநல அமைப்புக்களூடாகவும் விரும் பியவர்கள் நிதி வழங்க வாய்ப்புண்டு என்றும் தெரிவிக் கப்படுகிறது.

## பெருங்குளம்-சங்கத்தானை வீதியை புனரமைக்க வேண்டுகோள்

பெருங்குளம் சங்கத்தானை வீதியைத் தாமதமேதுமின்றி உடனடியாகப் புனரமைத்துத் தரவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். பெருங்குளம் சங்கத்தானை வீதியின் ஒரு பகுதி சாவகச்சேரி நகர சபைக் கும் அதன் அடுத்த பகுதி சாவகச்சேரி பிரதேச சபைக்கும் சொந்தமாக உள்ளதால் இந்த வீதியை இருதரப்பும் புனரமைக்காமல் ஒருவரை ஒருவர் மாறி குற்றஞ்சாட்டி தட்டிக்களித்து வருவதுடன் இதுவரை இந்த வீதி புனரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியூடாகவே பண்டித்தலைச்சி அம்மன் கோயில், மட்டுவில் தெற்கு-வடக்கு, கெருடாவில்- கல்வயல், சாவகச்சேரி வடக்கு பகுதிகளில் இருந்து மாணவர்கள் இந்துக்கல்லூரி மற்றும் மகளிர் கல்லூரிகளுக்கு மாணவர்கள் வருவதாகவும் இதனால் மாணவர்களின் கல்விச்செயற்பாடுகளுக்குத் தடைகள் இன்றியும் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு இன்றியும் உடனடியாகப் புனரமைக்கப்பட வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (28)

# சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு தென்மராட்சி தேசிய எழுச்சிப்பேரவை உதவி

## -குழந்தைகளின் எதிர்கால வாழ்விற்கும் திட்டம்

(தென்மராட்சி)

**சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி செய்ய தென்மராட்சி தேசிய எழுச்சிப்பேரவை முடிவு செய்துள்ளது. இதற்கு அமைவாக கைதடிப்பிரதேசம், கொடிகாமம், சாவகச்சேரி என மூன்று பிரதேசங்கள் மட்டத்திலும் அப்பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் ஊடாக பேரவை உறுப்பினர்கள் நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.**

அத்துடன் தாய், தந்தையரை இழந்துள்ள 50 சிறுவர்கள் தேர்தெடுக்கப்பட்டு சிறுவர் ஒருவருக்கு ரூபா 2000 வீதம் 50 சிறுவர்களுக்கு ரூபா ஒரு இலட்சம் அவர்களுடைய பெயரில் வைப்பிலிடவும். முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இத்திட்டத்தில் தாயையோ அல்லது தந்தையையோ இழந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் அக்குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கான தம்மாலான அனைத்து உதவிகளையும் செய்ய உள்ளதாகவும் தேசிய எழுச்சிப்பேரவை பேராளர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கான விசேட கூட்டங்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு பாடசாலையிலும் சாவகச்சேரி அரசியல் துறை அலுவலகத்திலும், கைதடி அரசியல் துறை அலுவலகத்திலும் நடைபெற்றுள்ளன. (28)

# பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் படையினர் நடந்துகொள்ள வேண்டாம்

## –தென்மராட்சி பொது மக்கள் ஒன்றியம் வலியுறுத்து

(தென்மராட்சி)

பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டாம் என சிறிலங்காப் படையினரை தென்மராட்சி பொது மக்கள் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள சாலைகளில் மக்கள் நடமாடும் பொது இடங்களில் படையினர் அச்சுறுத்தும் விதமாய் நடமாடுவதைக் கைவிட வேண்டும் எனவும் ரோந்து நடவடிக்கைகள் தவிர்க்கப் படவேண்டும் எனவும் பொது மக்கள் ஒன்றியம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

படைகளின் இத்தகைய நடவடிக்கைகள் பொது மக்களை கடும் விசனத்தில் ஆழ்த்தியுள்ளதுடன் கடந்த காலத்தில் சிறிலங்காப் படைகள் நடத்திய விவரிக்க முடியாத ஈனச் செயல்களினால் பாதிப்படைந்துள்ள மக்கள் இப்படியான படைகள் மக்களை அச்சுறுத்தும் விதமான நடவடிக்கைகளை கண்டிப்பதுடன் துப்பாக்கி முனைகளின் முன்னால் தமிழ் மக்களை அச்சுறுத்தி விடலாம் என்ற சிறிலங்காப் படைகளின் நினைவுகள் கனவுகளே அன்றி அது உண்மையல்ல எனவும் இவ் அமைப்பு தெரிவித்துள்ளது. (28)

# கொடிகாமம் பேருந்து நிலையம் மார்ச்சில் திறக்க ஏற்பாடு

தென்மராட்சிப் பிரதேசத்தில் அதிகளவான மக்களைக் கொண்ட பகுதியாகவும், வடமராட்சிப் பிரதேசத்திற்குமான பிரதான மையமாகவும் உள்ள கொடிகாமம் புதிய பேருந்து நிலையம் வரும் மார்ச் மாதம் திறக்கப்படவுள்ளது.

தற்பொழுது உள்ள பேருந்து நிலையம் மிகச் சிறியதாகவும் புனரமைக்கப்படாமலும் மக்கள் நின்று செல்வதற்கும் மிகவும் சிரமமாக இருப்பதுடன், பிரதானசாலைக்கு அருகில் இருப்பதால் வாகனங்கள் நெருக்கடிக்குள் நிற்பதுடன் பிரதான சாலையில் நெருக்கடி ஏற்படுவதாகவும் தெரியவருகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த பிரதேச சபை செயலாளர் அவர்கள் புதிய பேருந்து நிலையத்திற்கான வேலைகள் கணிசமான அளவு முடிந்துள்ளதுடன் வரும் மார்ச் மாதத்திற்குள் முழுவதுமாக முடிவுறும் என்றும் புதிய பேருந்து நிலையம் அனைத்து வசதிகளுடன் மக்கள் வசதிக்கு ஏற்ற வகையில் திறக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.(28)

# பாடசாலையை சொந்த இடத்தில் இயங்கவைக்க நடவழக்கை வேண்டும்

## –கல்வித்திணைக்களத்திடம் வேண்டுகை

சுழிபுரம் திருவடி நிலை இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலை யைச் சொந்த இடத்தில் இயக்கச்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என கல்வித்திணைக்களத்தை மூளாய்ப்பகுதியில் அமைந்துள்ள சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான அமைப்புக் கோரியுள்ளது.

'சூரியகதிர்' இராணுவ நடவடிக்கையின் பின்னர் பல வருடங்களாக சொந்த இடத்தில் இயங்காமல் இப்பாடசாலை கல்விளான் பிரதேசத்தில் இயங்கி வருகின்றது. இதனால் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகளை மாணவர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளதுடன் இப்பாடசாலையிலிருந்து இடைவிலகும் நிலை உருவாகியுமுள்ளது.

எனவே இப்பாடசாலையைச் சொந்த இடத்தில் இயங்கச்செய்ய வேண்டுமென அக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (15)

# வடமராட்சி கிழக்கில் பத்து பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இன்று ஆரம்பம்

வடமராட்சி கிழக்கில் பத்து பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இன்று ஆரம்பமாகிறது என கல்வி வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

குறிப்பாக மாமுனை அ.த.க பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலை, செம்பியன் பற்று அ.த.க பாடசாலை, தாளையடி றோ.க.த.க பாடசாலை, மருதங்கேணி இ.த.க பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க பாடசாலை, வெற்றிலைக்கேணி றோ.க.த.க பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை, கேவில் அ.த.க பாடசாலை என்பன ஆரம்பமாகின்றன.

இதன்போது சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகள் அருகில் உள்ள பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் சில பாடசாலைகள் பகுதி நேரப் பாடசாலையாகவும் செயற்படவுள்ளதாகவும் மேற்படி வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. (45)

# மட்டக்களப்பில் ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோருக்கு மட்டு-நகர முஸ்லிம் வர்த்தகர்கள் நிதியுதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச மக்களுக்கு மட்டக்களப்பு நகர முஸ்லிம் வர்த்தகர் சமூகம் நேற்று முன்தினம் ஒருதொகை நிதியை நிவாரணமாக வழங்கியது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து வாகரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பணியில் ரூபா ஒரு லட்சம், உயிரிழப்புகள் ஏற்பட்ட குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. கதிரவெளி, ஊரியன்கட்டு, கண்டலடி, வட்டுவான் ஆகிய இடங்களில் தஞ்சம் பெற்றுள்ள குடும்பங்களுக்கே உயிரிழந்தவர்களின் சமயச் சடங்குகளுக்காக இந்தத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.மட்டக்களப்பு நகர முஸ்லிம் வர்த்தகர் சமூகத்தின் இணைப்பாளர் கே..எல்.எம்.கலீல் தமது இந்த நிவாரண உதவி தொடர்பாக கருத்து வெளியிடுகையில், ஏற்கனவே அரசாங்கக் கட்டுப்பாட்டு பகுதியிலுள்ளவர்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டது போல் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தங்களால் இயன்ற உதவிகளை வழங்குவதாகவும், மேலும் உதவிகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளுக்கும் கனேடியப் பிரதமர் செல்ல வேண்டும்

## கனேடிய எதிர்க்கட்சி வேண்டுகோள்

கனேடியப்பிரதமர் போல் மார்ட்டின் தென் கிழக்கு ஆசிய வட்டகைக்கான விஜயம் ஒன்றை சனிக்கிழமை ஆரம்பித்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளுக்கும் செல்லுமாறு கனேடிய எதிர்க்கட்சியான புளொக் கியூபெக் கட்சி அவரை வேண்டியுள்ளது.

கனேடிய பாராளுமன்றத்தில் இரண்டாவது எதிர்க்கட்சியாக 53 ஆசனங்களுடனும், பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாநிலத்தின் தனிப்பெரும் கட்சியுமாகிய புளொக் கியூபெக் கட்சியே இவ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறிலங்கா மற்றும் இந்தோனேசிய அரசுகளுடன் பேசி, அங்கு மோசமாகப் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும், குறிப்பாக தமிழர் வதிகின்ற வடக்கிற்கும், இந்தோனேசியாவின் ஆஷே பகுதிக்கும் செல்வதை உறுதிப்படுத்துமாறும், கியூபெக் மக்கள் உட்பட கனேடிய மக்களின் மனிதாபிமான உதவிகள் பாகுபாடின்றி அனைத்து மக்களுக்கும் உரிய முறையில் செல்வதை நேரில் சென்று கண்டறியுமாறும் தனது வேண்டுதலில் அக்கட்சி மேலும் கனேடிய பிரதமரை வேண்டியுள்ளது.

இதேவேளை கனேடியப் பிரதமர் போல் மார்ட்டின் தலைமையிலான அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் கனடாவிலிருந்து இந்தோனேசியா பயணமாகியிருந்தது. நேற்று பிற்பகல் கொழும்பு வந்த இக்குழு இன்று மாலை அங்கிருந்து புறப்பட்டு இந்தியா செல்கின்றது. இதேவேளை கனேடிய தேசிய தொலைக்காட்சியான கனேடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குச் செல்வதற்கு கனேடியப் பிரதமர் தலைமையிலான குழுவிற்கு சிறிலங்கா அரசு அனுமதி வழங்கவில்லை என்றொரு செய்தியை வெளியிட்டுள்ளது. எமது பிரதிநிதியாக செல்லும் கனேடியப் பிரதமர், எமது உறவுகளை வடக்கு, கிழக்கிற்குச் சென்று சந்தித்து ஆறுதல் கூறுவதுடன், அவர்களுக்கு முழுமையான உதவிகள் கிடைப்பதை கனடா உறுதி செய்யும் என்பதை அவர்களுக்கு நேரில் தெரிவித்தாலேயே இப்பயணத்திற்கான உரிய பலன் கிடைக்கும் என கனேடிய தமிழ் அமைப்புக்கள் அவரிடம் நேரில் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. கனடா உட்பட பல்வேறு மேற்கத்தேய நாடுகளில், ஈழத்தமிழர்கள் பெருமளவில் வாழ்கின்றனர் என்றும், ஆதலினால் அவர்கள் நலன்களை முன்னிறுத்தி செயற்பட வேண்டிய கட்டாயம் பல மேற்கத்தேய அரசுகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும், ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.


# கலாச்சாரத்தைப்பேணும் குழு இரவு பகலாக நடவழக்கை

(யாழ்ப்பாணம்)

கலாச்சாரத்தைப் பேணும் குழுவினரால் கொக்குவில், கோண்டாவில், ஐந்து சந்தி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இடங்களில் கலாச்சார சீரழிவினைக் கட்டுப்படுத்தும் முகமாக இரவுபகல் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.இதன் விளைவாகக் கோண்டாவில் பகுதியில் கலாச்சாரச் சீர்கேட்டுச் செயல்களுக்கு ஈடுபடுத்தப்பட்ட வீடொன்றும் கலாச்சாரத்தைப் பேணும் குழுவினரால் முற்றுகையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (சு)

## சுனாமி நிவாரண நடவடிக்கைகளில்

# கட்சியை வளர்க்கும் நோக்குடன் செயற்படின் — ஜே.வி.பி. மக்கள் அலைகளால் அடித்துச் செல்லப்படும்



"ஆலயத்தில் இருக்கும் உண்டியலில் ஒரு சதத்தைப் போட்டால் அதிலிருந்து சத்தம் கிளம்பும் அப்படித்தான் உண்டியல் அமைக் கப்பட்டுள்ளது. நாங்களும் சிறிய வேலை யைச் செய்து முடித்து விட்டு பெரிதாக சத்தம் போட வேண்டும் இல்லாவிட்டால் அது மக்களுக்குக் கேட்காது" இவ்வாறு காலஞ்சென்ற சனாதிபதி ஆர்.பிரேமதாசா அவர்கள் ஜனசவி வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும் முன்னதாக ஊடகத்துறை யினரை வர வழைத்துக் கூறினார். பிரேம தாசாவின் ஊடகத்துறையினர் இந்தப் புத்தி மதியைக் கேட்டு விட்டு வெறுமனே இருக் கவில்லை பிரேமதாசா கூறியதற்கும் அதிக மாகச் சத்தம் போட்டார்கள். எப்படி யென்றால் எல்லா மணிக்கூட்டுக் கோபுரங் களுக்கும் பிரேமதாசன் பெயர் எழுதப்பட் டது. பின் பிரேமதாசாவின் பெயர் எல்லா இடங்களிலும் விளப்பரப்படுத்தப்பட்டதால் பிரேமதாசா என்ற பெயரைக் கேட்டதும் மக்கள் வெறுப்படையத் தொடங்கினார்கள். பலூனை ஊதினால் அது இலகுவாக வெடிக்கும் இல்லாவிட்டால் அதை வெடிக்க வைப்பது வெகு இலகுவாகும்.

பிரேமதாசாவுக்கும் அதே கதிதான் நடந்தது. பலூனை ஊதிக்கொண்டு போகும் பொழுது எதிர்க்கட்சியினர் அந்த பலூனை ஊசியால் குத்தியவுடன் அது வெடித்தது.

அக்காலத்தில் பிரேமதாசா அவர்கள் எதிர்க் கட்சியினரில் நிஸ்சங்க மல்லிமா ஆராய்ச் சியை தனக்கு நிகரானவர் எனக் கருதினார். நிஸ்சங்க மன்னன் காலத்தில் கல்வெட்டுக் களில் எல்லாம் அவரின் பெயர் பொறிக்கப் பட்டது. அவர் நாட்டுக்குப் பெரிதாக ஒன்றும் செய்யவில்லை. ஆனால் பிரேம தாசா அவர்கள் நாட்டுக்குப் பல நல்ல வேலைகளைச் செய்தபடியால் அவரின் பெயர் குப்பை மேடுகளில் எல்லாம் பொறிக் கப்பட்டது நிஸ்சங்க மன்னர் ஏனையவர் களிடத்தில் இருந்து கொள்ளை அடித்து தனது பெயரை விளம்பரப் படுத்துவதில் மிகவும் கெட்டிக்காரர். ஆனபடியால் இன்றும் நிஸ்சங்க மன்னரின் பெயரைக் கேட்டால் சிங்கள மக்கள் வெறுப்படை வார்கள் நிஸ்சங்க மன்னரின் பெயரையும் பிரேமதாசாவின் பெயரையும் கேட்டவுடன் ஜே.வி.பி.யினரைப்பற்றித் தான் நினைக்க வேண்டியுள்ளது.

ஜே.வி.பி. நல்ல கொள்கைகளை வைத் திருக்கும் ஒரு கட்சியாகும். சிரமப்பட்டு நல்ல வேலைகளைச் செய்வார்கள் ஆனாலும் நிஸ்சங்க மன்னரினதும் பிரேம தாசாவினதும் நோய் இவர்களுக்கும் கொஞ்சம் உள்ளது. ஜே.வி.பி.யினர் பத்தா யிரம் குளங்களைத் திருத்துவது, பத்தா யிரம் தொழில் கிராமங்கள், இப்படி கூச்ச லிட்டுக் கொண்டு வரும் பொழுது நிஸ்சங்க மன்னரின் நோய் இவர்களுக்கும் பரவி உள்ளதென்பது தற்பொழுது தெரி கின்றது. சத்தங்கள் போட்டாலும் பரவா யில்லை அதை முழுமையாக ஏற்றுக் கொண்டு பலூனை ஊதுவதுபோல் ஊதத் தொடங்கினார்கள். ஜே.வி.பி.யினர் குளங் களைத் திருத்துவது விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு அல்ல விவசாயத்தில் ஈடுபடாத மக்களை அரவணைத்து சிறிய வேலைகளைச் செய்து பெரிதாகக் கூக் குரலிடுவதற்கேயாகும். கோடை காலங் களில் குளங்களில் தண்ணீர் வற்றிப் போகும் மழை காலங்களில் குளங்களில் தண்ணீர் நிரம்பி வான்பாயும் இந்தக் குளங்களைப் புனரமைப்பதில் விவசாயி களுக்கு எந்த நன்மையும் கிடையாது. இதை எதிர்க்கட்சியினர் கூறும் பொழுது நாட்டு மக்கள் இவர்களைக் கடைக்கண் களால் பார்க்கத் தொடங்கினர்.

குளங்களை நிர்மாணிப்பது புதிய வேலைத் திட்டங்கள் அல்ல. டி.எஸ் சேனா நாயக்கவின் காலத்திலிருந்து குளங்களைத் திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. அரச சார்பற்ற நிறுவனங்கள் இதனைச் செய்யத் தொடங்கின. ஆனால் இவர்கள் விளம்பரப் பலகையில் எழுதிக் கொண்டு அல்லது, ஒலிபெருக்கி மூலமாக கத்திக்கொண்டு இதனைச் செய்யவில்லை. ஆனால் ஜே.வி.பி.யினர் தற்பொழுது குளங்கள் புனரமைப்பதை அரசியல் மயமாக்கி விளம்பரம் செய்யத் தொடங்கி யுள்ளனர். மரம் கொத்தி எல்லா மரங் களையும் இலகுவாகக் கொத்தும் ஆனால் வாழை மரத்தில் கொத்தினால் சொண்டு மரத்தில் இறுகி விடும். ஆனால் சுனாமி பேரலைகளின் அனர்த்தங்களினால் ஜே.வி.பி.யினர் மேற்கொள்ளும் நடவடிக் கைகள் மரங்கொத்தியின் கதையை ஞாபகத்திற்குக் கொண்டு வருகின்றது. தென்பகுதிக்குப் போகும் நிவாரணங்களை ஜே.வி.பி.யினர் பலாத்காரமாகப் பறித்தெடுத்து செல்கின்றனர். நிவாரணங் களைக் கொண்டு செல்லும் ஊர்திகளை இடைமறித்து அந்த ஊர்திகளில் ஜே.வி.பி. யினர் தங்களது விளம்பரங்களை ஒட்டு கின்றனர். ஊர்திகளில் செல்பவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் ஓட்டுனர் களுக்கு அடியும் இவர்களிடமிருந்து பரிசா கக்கிடைக்கின்றது. காலியில் ஜே.வி.பி.யின் சிவப்பு நிறமான உடுப்புகளையும் தொப்பி களையும் அணிந்து கொண்டு பதாகை களைத் தொங்கவிட்டுக் கொண்டு நெஞ்சில் "ஸ்டிக் கரை" ஒட்டிக்கொண்டு சுனாமி அரசியல் நடத்துகின்றனர்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகை அரசாங் கத்திற்கு வரும் நிவாரணப் பொதிகளில் ஜே.வி.பி ஸ்டிக்கர்களை ஒட்டி உள்ளது என 9.-01-2005 ஆம் திகதி செய்தி வெளி யிட்டுள்ளது.

அகதி முகாம்களில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை அங்கி ருந்து வெளியேறும்படி ஜே.வி.பி. கூறியதுடன் அம்முகாம்களை பலாத்கார மாக தம்வசம் ஆக்குவதற்கு ஜே.வி.பி. முயற்சி செய்துள்ளது. அகதிகளாக இருக்கும் மக்கள் இராணுவக் கட்டுப் பாட்டில் இருப்பதற்கு சம்மதம் தெரிவித் துள்ளனர். அத்துடன் பொது மக்கள் ஜே.வி.பி.யினரை அடித்துத் துரத்துவதாக எதிர்க்கட்சியினர் கூறி உள்ளார்கள். தமது பாராளுமன்ற உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சியினர் அடித்துத் துன்புறுத் துவதாக ஜே.வி.பியினர் முறைப்பாடு செய்துள்ளனர். எவர் எப்படிக் கூறினாலும் வரும்செய்திகளின் படி ஜே..வி.பியினர் சுனாமிப் பேரலையில் கைகளை வைத்துள்ளன ரென்பதை இச்சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் சுனாமிப்பேரலை விவகாரங் களில் எக்காரணங்கொண்டும் கட்சியின் சின்னம், நிறம்,கட்சிகளின் பதாகைகளைப் பாவிக்கவேண்டாமென கட்சியின் செயலா ளர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்

ஐக்கிய தேசியக்கட்சியினர் ஜே.வி.பியி னரைத் தாக்குகின்றனர் என்று முறைப்பாடு செய்வதற்குக் காரணங்கள் உள்ளன.

அதாவது சுனாமிப்பேரலையில் மறை முகமாக ஜே.வி.பி.யினர் தமது அரசியலை வளர்க்கின்றனர்.

ஒரு மனிதன் வேலை ஒன்றைச் செய் வதற்கு விளம்பரம் தேவை. விளம்பரம் தேவைப்படாத இடங்களும் உண்டு. மனிதர் கள் சில கொண்டாட்டங்களைச் செய்யும் பொழுது விளம்பரங்களைச் செய்கின்றனர். ஆனால் மரணச்சடங்குகளின் பொழுது எந்த மனிதர்களும் தங்களை விளம்பரப் படுத்துவதில்லை. கொண்டாட்டங்களின் பொழுது மனிதர் அல்லது கட்சியினர் பொதுவாக விளம்பரம் செய்வார்கள். ஆனால் மரணவீடுகளில் விளம்பரம் செய்ப வர்கள் உலகில் எங்கும் கிடையாது. அப்படி அவர்கள் செய்வார்களானால் மனிதர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார் கள் அவர்களை மன்னிக்க மாட்டார்கள்.

குளங்களிலும் மாட்டுத்தொழுவங் களிலும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஜே.வி.பி. சுனாமிப்பேரலை யில் தலையை மாட்டிக்கொண்டு தற்பொழுது பெரும் திண்டாட்டங்களுக்கு முகம் கொடுத் துள்ளது.

ஜே.வி.பி. அரசியல் கட்சியல்ல, அது ஒரு அரசாங்கம். அரசாங்கத்தில் அரைவாசி பேர்கள் ஜே.வி.பி அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களுமாவர். அதேபோல் பிரதேச சபைகளிலும் சரிபாதியாக ஜே.வி.பியினர் உள்ளனர். ஆகவே ஜே.வி.பிகட்சியாகச் செயற்பட முடியாது. ஒரு அரசாகவே அவர்கள் செயற்படவேண்டும். ஜே.வி.பி அரசுடன் இருப்பதால் அரசாங்கத்தை வழிநடத்து வதுடன் , தமது அங்கத்தவர்களை முடிந் தளவு அரச திணைக்களங்களில் இணைப் பதற்காகவே தற்பொழுது செயற்பட்டு வருகின்றனர். இன்று 39 பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஜே.வி.பி.கட்சியில் இருக்கின்றனர்.

இன்று ஜே.வி.பி. அரசாங்கத்தின் எதிர்க் கட்சியாகச் செயற்படுகின்றது. அரசாங் கத்தின் சகல சலுகைகளையும் பெற்றுக் கொண்டு தற்பொழுது ஜே.வி.பி அமைச் சின் கீழ் இயங்கும் சகல வாகனங் களையும் பயன்படுத்தி தென்மாகாணத்தில் சுனாமி அனர்த்த வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது. தற்பொழுது இது சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் பிரதமர் ராஜபக்ஷவுக்குப் புகார் செய்துள்ளனர். தற்பொழுது ஜே.வி. பியினர் சிவப்பு நிறத்தையும் ஸ்டிக்கரையும் ஒட்டிக்கொண்டு கட்சியை வளர்க்கும் படலத்தில் இறங்கியுள்ளனர். இதில் அவர் கள் வெற்றி பெறாவிடில் தற்கொலை செய் வதைத் தவிர ஜே.வி.பிக்கு வேறு மார்க்கங் கள் கிடையாது.

கலங்கிய குட்டையில் மீன்பிடிக்கும் மார்க்கங்களும் உண்டு. தண்ணீரில் இறங்கி நீச்சலடித்து மீன்களைப் பிடிக்க முடியாது.

நாம் விடுதலைப்புலிகளை எடுத்துக் கொள்வோம். சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மக்களுடன் இணைந்தே சேவைகளைச் செய்கின்றனர். ஜே.வி.பியினர் தென்பகுதிகளில் செய்யும் சேவைகளையே விடுதலைப்புலிகள் வடகிழக்கிலும் செய்கின்றனர். நிவாரண

உப்புள் ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
மொழியாக்கம்:அ.சக்திவேல்

வேலைகள் முழுவதையும் தமது கட்டுப் பாட்டில் வைத்துள்ளனர்.

அங்கு சென்றால் அவர்களின் நிவாரண சேவைகள் மிகத்தூய்மையாக நடைபெறு வதை எம்மால் காணமுடிகின்றது. விடு தலைப்புலிகள் என்ற எழுத்துக்களை அங்கு காணமுடியாது. சர்வதேச நாடுகள் புலிகளின் நேர்மையான சேவைகளைப் பாராட்டியுள்ளன. சர்வதேசம் அவர்களுக்கு உதவிகளையும் செய்கிறது. ஆனால் ஜே.வி.பியினர் வெளிநாட்டு நிவாரணங் களுக்குத் தமது பெயரையும் சின்னங் களையும் குத்தியுள்ளனர். அரசாங்கத் திற்கே நிவாரணப் பொருட்கள் வந்து சேர்கின்றன. அரசியல் கட்சிகளுக்கு அல்ல. தாங்கள் அனுப்பும் நிவாரணங்களை அரசியல் இலாபங்களுக்குப் பயன் படுத்தினால் அதை உதவி வழங்கும் நாடுகள் கண்டு கொண்டால் நிவாரணங்கள் யாவும் நிறுத்தப்பட்டுவிடும்.

ஜே.வி.பியினருக்கு நாடு எப்படியானா லும் அவர்களுக்குப் பிரச்சினையில்லை. கட்சியை வளர்க்கவேண்டும் என்ற குறுகிய நோக்கத்துடன் அரசியல் வேலைகளைச் செய்துகொண்டு வருகின்றனர். ஆனால் ஜே.வி.பியினர் கட்சியை வளர்க்கும் நோக்கத்துடன் செயற்படுவார்களானால் சுனாமி அலையைவிட மிகப்பயங்கரமான மக்கள் அலைகளால் அவர்கள் அடித்துச் செல்லப்படுவார்கள். ★

**06.**

➡ பாக்தாத்தின் வடமேற்கே இடம்பெற்ற நிலக் கண்ணிவெடித் தாக்குதலில் 7 அமெரிக்கப் படைவீரர்கள் பலி.

➡ சுனாமி கடல் பேரழிவினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவி வழங்குவதற்காக இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் மாநாடு இடம்பெற்றது.

➡ தென்னாபிரிக்க முன்னாள் சனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மகன் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு மரணம்.

**07.**

➡ காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் முகாம் அருகே தீவிரவாதிகளினால் நடத்தப்பட்ட தாக்குதலில் 5பேர் பலி.



ஸ்ரீ நகரில் தாக்குதல்

➡ ஈரானிடமிருந்து 50 இலட்சம் தொன் திரவநிலை எரிவாயுவை (எல்.என்.ஜி) இந்தியா விலைக்கு வாங்கும் முகமாக உடன்பாட்டில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன.

➡ பங்களாதேஷின் தலைநகர் டாக்காவிற்கு அருகேயுள்ள ஆடைத் தொழிற்சாலையில் இடம்பெற்ற தீ விபத்தில் 21 பேர் பலி;பலர் காயம்.

**08.**

➡ சுனாமியினால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவின் ஆஷே மாநிலத்தை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் பார்வையிட்டார்.



ஆஷேயில் கொபிஅனான்

➡ ஈராக்கின் மொசூல் நகருக்கு அருகிலுள்ள அய்தா என்ற கிராமத்திலுள்ள குடியிருப்பு ஒன்றின் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய விமானக் குண்டு வீச்சில் 14 பொதுமக்கள் பலி.

**09.**

➡ இத்தாலி நாட்டின் வடபகுதியில் இருக்கும் போலாஸ்னா என்ற இடத்தில் பயணிகள் ரயிலும் சரக்கு ரயிலும் மோதிக் கொண்டதில் ரயில் எஞ்சினும் ஒரு ரயில் பெட்டியும் நொருங்கின. இதில் 13 பேர் பலி ; 50 இற்கும் மேற்பட்டோர் காயம்.



கோர விபத்து

➡ சூடானில் 21 வருடங்களாக இடம் பெற்று வந்த உள்நாட்டுப் போரை முடிவிற்கு கொண்டு வருவதற்கான சமாதான ஒப்பந்தம் கென்பாலின் தலைநகர் நைரோபியில் கையெழுத்திடப்பட்டது.



உடன்படிக்கைக்கு முன்......

➡ இந்தோனேசியாவின் பண்டா ஆஷேயில் படைத்தரப்பினருக்கும் போராளிகளுக்கு மிடையில் இடம்பெற்ற மோதலில் 7பேர் பலி.

➡ வடஐரோப்பாவின் பல பாகங்களை கடும்புயல் தாக்கியதில் 14 பேர் உயிரிழப்பு.

➡ சுனாமியினால் பாதிக்கப்பட்ட நிக்கோபார் தீவிலுள்ள 11 பழங்குடியினர் 15 தினங்களுக்கு பின் மீட்கப்பட்டனர்.

**10.**

[illegible]க்கிலுள்ள சலாவுதீன் மாநிலத்தில் [illegible]ளுநர் கதான் ஹமாடா உட்பட [illegible]விரவாதிகளினால் கடத்திச் [illegible]பட்டனர். இவர்கள் திக்ரிற் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது லட்டிபியா என்ற இடத்தில் கடத்தப்பட்டனர்.

➡ நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டு சென்ற "சீகாவாக்ஸ்" வகை உலங்கு வானூர்தி இந்தோனேசியாவின் பண்டா ஆஷே விமான நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் அப்பாலுள்ள நெல்வயலினுள் விழுந்து நொருங்கியது.



உலங்கு வானூர்தி விபத்து

➡ இந்தியாவின் ஆந்திராவில் அரசுப் போக்கு வரத்துக் கழக பேருந்து ஒன்றை நக்சலைட்டுக்கள் தீ வைத்துக் கொழுத்தினர்.

➡ கர்நாடக மாநில அரசு போக்கு வரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்தொன்று ஹுப்ளியில் இருந்து குல்பர்கா மாவட்டத்திலுள்ள சித்தா பூருக்கு சென்று கொண்டிருந்த போது பிஜிப்பூர் அருகே அலாமதி கால் வாயில் விழுந்ததில் 50 பேர் பலி.




பேருந்து விபத்து




➡ சுமாத்ராவில் நில நடுக்கம் மக்கள் பீதியுடன் ஓட்டம்.

➡ பாக்தாத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

➡ சங்கரராமன் கொலை வழக்கில் காஞ்சிமடத்தின் இளைய மடாதிபதி விஜயேந்திரர் கைது செய்யப்பட்டார்.



விஜயேந்திரரின் கைது

➡ இந்தோனேசியா, ஈரானில் நிலநடுக்கம்.

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 இராணுவ அதிகாரிகள், 4 பொலிசார் பலி.



பாக்தாத்தில் தாக்குதல்

➡ தெற்கு கலிபோர்னியாவின் வென்சுரா நகருக்கருகிலுள்ள வாகொன் சித்திரா என்ற இடத்தில் ஏற்பட்ட மண் சரிவில் 2 பேர் பலி 12 பேர் காயம்.

➡ இஸ்ரேல் பிரதமர் ஏரியல்ஷரோனை அமெரிக்க செனட்டர் ஜோன்கெரி ஜெருசலேமில் சந்தித்து உரையாடினார்.

**11.**

➡ ஈராக்கில் சதாமின் சொந்த இடமான திக்ரிற்றிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு வெளியே நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 6 பொலிசார் உட்பட 13 பேர் பலி.

**12**

➡ ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் உயர் தலைவரான "ஆயதுல்லா அலிசிஸ் ராணி" அவரது மகன் நான்கு பாதுகாவலர் கள் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொலை.

➡ இந்தியாவின் பீகாரில்- பகல்பூர் நஷக்கச்சியா மாவட்டத்தில் படகு ஒன்று ஆற்றைக் கடக்கும் வேளையில் கடலில் கவிழ்ந்ததில் 30 பயணிகள் பலி.

➡ ரஷ்யாவைச் சேர்ந்த அன்ரனோவ் 2 பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில் 9 பேர் பலி.

# சுனாமியால் பாதிப்புற்றுள்ள தென்பகுதி கரையோரங்களில் ஜே.வி.பி யினர் கெடுபிடி

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பினால் தென் பகுதி கிராமங்களான அம்பலாங் கொட முதல் மாதம்பை, ஹிக்கடு வ்வ, பூசா உள்ளிட்ட பல பிரதேச ங்கள் பெரும் அழிவைச் சந்தித் துள்ள நிலையில் அங்கு பாரிய நிவாரண உதவிகள் கிடைக்கப் பெற்றாலும் அவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் சென்றடைவதில்லை என சிறில் தர் மவர்தன என்ற கலைஞர் தெரி வித்துள்ளார்.

இவர் மேலும் கூறுகையில் சுனாமி இயற்கை அனர்த்தத்தை விட தற்போது ஜே.வி.பி.யினரின் ஒருவகை அரசியல் சுனாமியே தற்போது இம்மக்களைப் பெரிதும் பாதிப்படையச் செய்வதாகத் தெரி வித்துள்ளார்.

செயலணிக் குழு என்று கூறிக் கொண்டு தினமும் சிலர் உழவு இயந்திரத்தில் வருகை தருவ தாகவும் அவர்கள் அறிமுக மற்ற வர்கள் எனவும் ஒழுங்கான முறை யில் அவர்கள் பணிகளைச் செய்வதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குழுவினருக்கு ஜே.வி.பி என்ற சின்னம் பொறிக்கப்பட்ட உடையும் சிவப்புத் தொப்பியும் வழங்கப் பட்டு அவர்கள் சுத்திகரிப்புப் பணி யாளர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்வதாகவும் எனினும் அது தொடர்பான பணிகளைச் செய் யாமல் பிரதேச செயலரின் கடமைகளைப் பொறுப்பேற்றிருப் பதாகவும் தர்மவர்தனா தெரிவித் துள்ளார்.

அங்கு முகாம்களில் தங்கி யிருப்போருக்கு சிகிச்சையளிக்க வரும் வைத்தியர்களுடனும் இவர்கள் முரண்படுவதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி யளிக்கும் விடயத்தில் அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதை மக்கள் முழுமையாக வெறுப் பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுவீடன் பிரதமர் ஜோரன் பெர்சனின் சிறிலங்காவிற்கான விஜயம் ரத்து!

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தீவகத்தைப் பார்வை யிடுவதற்காக திட்டமிட்டிருந்த பயணத்தை சுவீடன் பிரதமர் ஜோரன் பெர்சன் ரத்துச் செய்துள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய் மற்றும் புதன் ஆகிய நாட்களில் அவர் இலங்கைத் தீவகப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

ஆசிய ஆழிப்பேரலையில் 52 சுவீடன் நாட்டவர் பலியாகியுள்ளனர் 893 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களைக் கடத்தி விற்பனை செய்த வயோதிபர் சிறிலங்காப் பொலிசாரால் கைது

12 வயதிலிருந்து 14 வயது வரையிலான சில சிறுவர், சிறுமியரைப் பணம் பெற்றுக்கொண்டு விற்க முயன்ற 60 வயதுடைய ஒருவரை, காலி நகரின் பலப்பிட்டிய கிராமப் பகுதியில் வைத்துப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

தங்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இவரைக் கைதுசெய்ய முடிந்ததாக பொலிஸ் தலைமையதிகாரி டபிள்யூ. டீ.ரி.விஜேசேன தெரிவித்தார். இந்நபர் ஏற்கனவே விற்றுள்ள சிறுவர் களைத் தேடிக்கண்டுபிடிப்பதில் சிரமம் இருப்பதாகத் தெரிவித்துள்ள பொலிசார் இத்தகைய வியாபார முயற்சிகளைக் கண்டறிவதில் மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.(32)

## நாணயக்கொள்கையில் மாற்றமில்லை

### -சிறிலங்கா நாணயச்சபை அறிவிப்பு

சுனாமிப் பேரழிவின் பின்னர் ஏற்பட்டுள்ள நாணய நிலைமை களைக் கருத்திற்கொண்டு நாணயச் சபையானது தமது நாணயக் கொள்கையை மாற்றமின்றி வைத் திருக்கத் தீர்மானித்துள்ளது. இதன் படி சிறிலங்கா மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் அதா வது மீள்கொள்வனவு வீதமும் மீள் கொள்வனவு நேர்மாற்று வீதமும் மாற்றமின்றி இருக்கும்.

ஏற்கனவே மத்திய வங்கியின் மீள் கொடுப்பனவு நேர்மாற்று வீதம் 9 என்ற நிலையிலும், நேர் மாற்று வீதம் 7.50 என்ற நிலை யிலும் இருந்து வருகின்றன. சுனாமிப் பாதிப்பினால் நாட்டிற்கு ஏற்பட்ட நட்டங்களை புனரமைக்க மொத்தமாக 140 மில்லியன் தேவைப்படும் என மதிப்பிடப் பட்டுள்ளது. எனினும் இந்தப் பாதிப் புக்கள் முழுமையாக சுற்றுலா மற்றும் மீன்பிடித்துறைக்கு ஏற் பட்டுள்ளமையால் முழுப்பொரு ளாதார நடவடிக்கையின் மீதான எதிர்கணியத்தாக்கம் மட்டுப்படுத் தப்பட்டதாகவே இருக்கும் என்பதா லேயே இந்த முடிவை நாணயச் சபை மேற்கொண்டுள்ளது. (32)

# சுனாமியால் அழிவடைந்த பிரதேசங்களை கட்டியெழுப்ப 48 நாடுகள் இணக்கம்

## – நிதியமைச்சர் சரத்அமுனுகம தகவல்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் அழிவடைந்த பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்க 48நாடுகள் இணங்கியுள்ளதாக சிறிலங்கா நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவி வழங்க ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டிலேயே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது. மாநாட்டில் கலந்துகொண்ட நிதியமைச்சர் நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய போது கருத்துத் தெரிவிக்கையிலேயே, இவ்வாறு கூறியுள்ளார்.

# சுனாமி பேரனர்த்தத்தில் இறந்த அரச ஊழியர்கள் விபரம் கோரல்

(கொழும்பு)

சுனாமி பேரழிவினால் அரசநிர்வாகங்களில் தொழில் புரிந்த இறந்தவர்களின் முழு விபரங்களையும் அறிவிக்குமாறு சகல அரசாங்க திணைக்களங்களுக்கும் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக சகலமாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் சுற்று நிருபம் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சுனாமி அனர்த்தத்தினால் இறந்தவர்கள் அல்லது, காணாமல் போனவர்களின் ஓய்வூதியம் அல்லது சேமலாபநிதி பெறுவதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்ற படியால் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## - சுனாமி அனர்த்தத்தில் இழந்த-

# தே.அ.அ, சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தில் அடையாள அட்டைகளை இழந்தவர்கள் பற்றிய தகவல்களை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடையாள அட்டைகளை இழந்தவர்கள் அவற்றிற்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் மாகாண செயலாளர்கள் கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

அடையாள அட்டைகளை விண்ணப்பிப்பதற்கு நடமாடும் சேவைகளும் நடத்தப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. உத்தேசமாக ஒரு இலட்சம் பேர் அவர்களது அடையாள அட்டைகளை தொலைத்து விட்டார்களென்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் சுனாமி அனர்த்தத்தினால் சாரதி அனுமதிப்பத்திரங்களைத் தொலைத்தவர்களுக்கு கட்டணம் எதுவும் இன்றி தற்காலிக மோட்டார் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. 'ஏ' எழுத்தினைக் கொண்ட அனுமதிப்பத்திரங்களை வைத்திருந்தவர்கள் கொழும்பிலுள்ள மோட்டார் வாகன பதிவாளர் திணைக்களத்தில் விசேட கருமபீடத்தில் கிழமைநாட்களில் கிராமசேவை உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டபுகைப்படப் பிரதியொன்றை கையளிப்பதன் மூலம் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.'ஏ' எழுத்துப் பொறிக்கப்படாத அனுமதிப் பத்திரங்களை வைத்திருந்தவர்கள் வேறு வேறு அலுவலகத்திலிருந்து தற்காலிக அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாமென்று அறிவிக்கப்படுகின்றது.


## வாகனம் விற்பனைக்குண்டு

இலங்கையில் எப்பாகத்துக்கும் செல்லக் கூடிய முறையில் உள்ள 59-5529 இலக்கமுடைய பத்து இருக்கைகளுடன், குளிரூட்டியும் கொண்ட மஸ்டா வகையைச் சேர்ந்த வாகனம் விற்பனைக்குண்டு வாங்க விரும்புவோர் இன்பம் மின்னியல் விற்பனை நிலையம் முல்லை வீதி புதுக்குடியிருப்பு என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:-
**ம.நிமால்**
**புதுக்குடியிருப்பு**

(5094)

### கிளி/தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் பின்வரும் பதவி நிலைக்கு

## விண்ணப்பம் கோரப்படுகின்றது

**பதிவாளர்** Registrar

**1.க.பொ.த. உயர்தரத்தில் சித்தி**

**2. முகாமைத்துவ நிர்வாக நிலையில் ஐந்து வருடத்திற்கு குறையாத அனுபவம்**

**3.கணனி பயன்படுத்தலில் அனுபவம் உள்ளவர்**

**ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.**

மேற்படி தகைமை உள்ளவர்கள் மட்டும் எதிர்வரும் 30.01.2005க்கு முன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் கீழ்வரும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது கடித மூலமோ அனுப்பி வைக்கவேண்டும். 07.02.2005ஆம் திகதி காலை 9.00 மணியிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சை எமது காரியாலயத்தில் நடைபெறும். மேற்குறிப்பிட்ட தகைமை உள்ளவர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிப்பதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

**அதிபர்,**
**கிளி/ தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்,**
**கிளிநொச்சி.**

(சி-11075)

COMITE INTERNATIONAL GENEVE

## Vacancies - Immediate
## Drivers

The ICRC has vacancies for the above positions to support the sub-delegation in various Humanitarian programmes in Puthukkudiyiruppu and Kilinochchi areas, in accordance with ICRC security regulations.

We are looking for highly competent and experienced drivers. The candi-date should have the following qualifications:

- ☒ be experienced, confident and safe Drivers
- ☒ possess a valid (Class A) Sri Lankan Driving Licence
- ☒ speak and be able to understand English
- ☒ have knowledge of basic vehicle maintenance

**Job Description:**

- ☒ to drive Land cruisers for the different ICRC programmes
- ☒ to drive the truck to support the ICRC work
- ☒ to carry out checks and emergency maintenance on vehicles
- ☒ to use HF/VHF radio within the vehicle

**Salary : Depending on qualifications and experience**

Suitable candidates are requested to contact ICRC Kilinochchi office with the CV on or before Wednesday(19.01.2005) and make an appointment with the Administrator.

**ICRC Office,**
**16, Depot Rd,**
**Kanagapuram,**
**Kilinochchi.**

**TP: 021-2285940, 0712296680**

(5561)

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**

COMITE INTERNATIONAL GENEVE

## Vacancies – Immediate

## Translators with medical background

The ICRC has vacancies for the above positions to support the sub-delegation in various Humanitarian programmes in Puthukkudiyiruppu and Kilinochchi areas, in accordance with ICRC security regulations.

We are looking for highly competent and experienced translators. The candidate should have the following qualifications:

**Requirements:**
- Team spirit, reliability and professional commitment
- High motivation and willingness to learn, resistance to stress
- Good command of English, spoken and written
- Relevant professional experience
- Good computer and reporting skills
- Valid driving permit is an asset

**Tasks:**
- Oral translation between the doctor - patient / nurse - patient and vies versa
- Written translation of documents and forms
- Oral translation in meetings and training sessions
- Taking of written minutes of meetings

**Salary** : Depending on qualifications and experience

Suitable candidates are requested to contact ICRC Kilinochchi office with the CV on or before Wednesday(19.01.2005) and make an appointments with the Administrator.

**ICRC Office,**
**16, Depot Rd,**
**Kanagapuram,**
**Kilinochchi.**

**TP: 021-2285940, 0712296680**

(5560)

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**

**Direct Start**

**O/L மாணவர்களுக்கான புதிய கணினி பிரிவுகள் ஜனவரி மாதம் ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகும்.**

**கல்வி ஆண்டு 2005**

- **Diploma in MS Office** (MSO)
- **Diploma in Computer Studies** (DICS)
- **Diploma in Computer Programming** (DCP)
- **Diploma in Desktop Publishing** (DTP)
- **Diploma in Web Design** (DWD)
- **Diploma in Computerised Accounting** (DCA)



இலவச பாடநூல்களும் குறிப்புகள்

மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன்

- மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சின் அங்கீகாரம்
- 12 ஆண்டுகள் கணினி கல்விச் சேவையில் அனுபவம்
- இலவச பாடநூல்கள் குறிப்புகள் ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இடம் மாறி கற்கும் வாய்ப்பு
- ICM UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- கட்டணங்கள் தவனை முறையிலும் செலுத்தலாம்
- நவீன சமகால கணினி பாடநெறிகள்

அனைத்து பாடநெறிகளும் 3 – 4 மாதங்கள்

(சி-11126)

**AFFILIATED TO ASIAN COMPUTERS**

| | | | | |
|---|---|---|---|---|
| கணினியியல் கல்லூரி<br>பாழ்சாலை, கிளிநொச்சி. | 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.<br>✆ 021-222 5677 | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி)<br>✆ 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி.<br>✆ 0773-122198 | கண்டி வீதி சாவகச்சேரி.<br>✆ 077-3039587 |

# நேபாளத்தில் 14 இந்திய இராணுவத்தினர் தீவிரவாதிகளால் கடத்தல்

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் இந்தியஇராணுவவீரர்கள் 14 பேரை மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். கடத்தப்பட்ட இந்திய இராணுவ வீரர்கள் கூர்க்கா ரெஜிமெண்ட் படையைச் சேர்ந்த வர்களாவார்கள் என இந்திய இராணுவத் துறை அறிவித்துள்ளது.

இதனிடையே நவல்பராசி மாவட்டத்தில் மூன்று இந்திய வாகனங்களை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தீ வைத்துக்கொளுத்தினர். நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதி களின் வன்செயல்கள்அண்மையில் அதிகரித்துள்ளன. நேபாளத்தின் பாரா மாவட்டத்தில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்றை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் எறிந்தனர். இதில் 4 பேர் பலியானார்கள். அவர்களில் நேபாள பாதுகாப்புப் படைவீரர் ஒருவரும் அடங்குவார்.

மாவொயிஸ்ட்டுக்கள் சாலையோரமாக சில வெடிகுண்டுகளை வைத்திருந்தனர். அவற்றை உள்ளூர் மக்கள் செயல் இழக்கச் செய்ய முயன்ற போது அதில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. அதில் அந்த இடத்திலேயே இருவர் பலியானார்கள்.

சுனாமி அலையால் பாதிக்கப்பட்ட கடலூர் தேவனாம்பட்டி மீனவர்கள் நேற்று முன்தினம் மீண்டும் கடலுக்குச் சென்றபோது அவர்களை தமிழக கவர்னர் சுர்ஜித்சிங் பர்னாலா கொடியசைத்து அனுப்பி வைக்கிறார்.



## தானியங்கி விமானம் கண்டுபிடிப்பு

ஓரிசா மாநிலம் சந்திப்பூர் ரொக்கெட் சோதனை தளத்திலிருந்து காணாமற் போன விமானியில்லாத சிறிய விமானம் கண்டுபிடிக்கப்பட்டது. எட்டு அடி நீளமுள்ள அந்த விமானம் சந்திப்பூர் ஒருங்கிணைந்த சோதனைத் தளத்திலிருந்து கிளம்பிச் சென்ற பின்னர் காணாமற் போனது.

பாசோர் மாவட்டத்தில் உள்ள கட லோரக் கிராமமான கரசகப்பூர் அருகே அந்த விமானம் சிதைந்த நிலையில் கீழே கிடந்தது. கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலி சார் தெரிவித்தனர்.

அந்த மைக்ரோ விமானத்தை மீனவர் கள் தான் முதலில் கண்டுபிடித்தனர். அது பற்றி அவர்கள் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தனர். பொலிசார் ஏவுகணை சோத னைத்தள அதிகாரிகளுக்குத் தகவல் தெரி வித்தனர்.கடந்த புதன்கிழமை மாலை நேரத்தில் அந்த விமானம் பறக்க விடப்பட்டது. பின்னர் சிறிது நேரத்தில் அது காணாமற் போய்விட்டது. உடனே இது குறித்து பொலிசாருக்கு இராணுவ அதிகாரிகள் தகவல் கொடுத்தனர்.

ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயக்கப் படும் அந்த விமானம் பல்வேறு நோக்கங் களுக்காக பயன்படுத்தப்படுகிறது. 2003 ஆம் ஆண்டிலும் இதே போன்று விமானி யில்லாத விமானம் ஒன்று காணாமற் போனது. அதுவும் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

# 2020 இல் இந்தியாவும் சீனாவும் அமெரிக்காவை மிஞ்சிவிடும்

## அமெரிக்க உளவுத்துறை தகவல்

**2020ஆம் ஆண்டில் இந்தியா, சீனா போன்ற நாடுகள் அமெரிக்காவை மிஞ்சுமளவிற்கு மிகப்பெரும் சக்தியாக வளர்ச்சி கண்டுவிடும் என அமெரிக்க உளவுத்துறை அமைப்பான C.I.A கணித்துக் கூறியுள்ளது.**

114 பக்கங்கள்கொண்ட C.I.A யின் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்ப தாவது; 2020ஆம் ஆண்டுகளில் இந்த 2 நாடுகளும் பொருளாதார வளர்ச்சி, இரா ணுவ வல்லமை பெற்று அசைக்க முடி யாத அளவு ஆதிக்க சக்திகளாக விளங்கும் இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் மக்கள் தொகை அதிகமாக இருப்பதால் மாபெரும் உலக சந்தைகளாக இந்த நாடுகள் உரு வாகும். அமெரிக்காவைப் பல துறைகளில் இந்த 2 நாடுகளும் தோற்கடித்துவிடும் என்று கணித்துள்ளது.

ஒன்றுபட்ட ஜேர்மனி 19ஆம் நூற் றாண்டில் எப்படி வலிமையுடன் இருந் ததோ அதைப்போலவும் 20ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் அமெரிக்கா எப்படி வல்லரசாக படிப்படியாக உருவாகியதோ அதைப்போல இந்தியாவும், சீனாவும் வருங்காலத்தில் சாதிக்கும் எனவும் அது போல சீனாவின் தனிநபர் உற்பத்தி 2020ஆம் ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளை மிஞ்சிவிடும் என்றும் அமெரிக்க உளவுப்படை கண்டுபிடித்துள்ளது.

இந்தியா,சீனாவைப்போல பிரேசில், இந்தோனேசியா போன்ற நாடுகளும் ஆதிக்க சக்திகளாக உருவெடுக்கும் என்று C.I.A அமைப்பு கணித்துள்ளது.

# தமிழகத்தில் ஜல்லிக்கட்டு தொடர்கிறது ஒரு நாளில் மட்டும் 201 பேர் படுகாயம்

பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு மதுரை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் ஜல்லிக்கட்டு என்னும் வீரவிளையாட்டு நேற்று முன்தினமும் நடைபெற்றுள்ளது. பல ஊர்களைச்சேர்ந்த 400 இற்கு மேற்பட்ட காளைகள் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டன.

கோபாவேசத்துடன் வெளியேறி வந்த காளைகளை அடக்குவதற்கு இளைஞர்கள் முண்டியடித்தனர். இந்த வீர விளையாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 201 பேர் படு காயமடைந்துள்ளதாக தமிழக செய்தித்தாள் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.



முட்டிமோதவந்த காளையின் திமிரை கட்டிப்பிடித்து அடக்க முனையும் இளைஞர்.

## ஜம்மு – காஷ்மீர் மோதலில் தீவிரவாதி பலி

ஜம்மு - காஷ்மீர் சிறிநகரில் கடவுச்சீட்டு அலுவலகத்தில் நேற்று முன்தினம் தற்கொலைத் தீவிரவாதிகள் புகுந்து கொண்டதை அடுத்து அவர்களைத்தேடியழிக்கும் நடவடிக்கையில் இடுபட்டிருந்த இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான துப்பாக்கிச் சண்டையில் ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டிருப்பதாக இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


## பாடசாலை நூலகங்களுக்கான இலவச பாடப்புத்தக விநியோகம்

**டிசம்பர் 26, 2004 இல் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கு உதவுமுகமாக (தரம் 1 தொடக்கம் உயர் தரம் வரை யான) பாடப்புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள், உசாத் துணை நூல்கள் போன்றவற்றை பாடசாலை நூலகங் களுக்கு இலவசமாக வழங்கவுள்ளோம். பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள் தங்களது பாடசாலையில் உள்ள தரங்களின் (வகுப்புகள்) விபரங்களை சனவரி 30,2005 இற்கு முன்னர் எமக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினால் காலதாமதமின்றி விநியோகம் செய்யக்கூடியதாக இருக்கும்.**

**லங்கா புத்தகசாலை (தொலைபேசி-234192) கொழும்பு-12**

***தொடர்புகட்கு:- சிறிலங்கா புத்தகசாலை***
***234,கே.கே.எஸ்.வீதி,***
***யாழ்ப்பாணம்,***
***தொலைபேசி-021-2222573***

(சி.11182)


# சங்கரமட நிர்வாகம் புதிய நிர்வாகிகளிடம் ஜெயலலிதா திடீர் முடிவு

(சென்னை)

சங்கரமட நிர்வாகம் முற்றாக சீர்குலைந்து விட்டதாக எழுந்த முறைப்பாட்டையடுத்து காஞ்சி மடத்தை நிர்வகிக்க அதிகாரிகள் குழு அமைக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா முடிவு செய்துள்ளார்.

சங்கரராமன் கொலை வழக்கில் சங்கராச் சாரியாரை பொலிசார் கைது செய்தனர். அவர் பிணையில் வெளிவந்த நிலையில் இளைய சங்கராச்சாரியார் விஜயேந்திரரையும் பொலிசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். இது தவிர சங்கரமடத்தை நிர்வகித்து வரும் சுந்தரேச ஐயர், இளைய சங்கராச்சாரியார் விஜயேந்திரரின் தம்பி ரகு ஆகியோரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஜெயேந்திரர் சங்கராமடத்திற்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விஜயேந்திரர் சிறை யில் உள்ளார். 2 சங்கராச்சாரியார்களும் மடத்தில் இல்லாததால் மடத்தின் அன்றாடப் பணிகள் அடி யோடு பாதிக்கப்பட்டு விட்டன. சங்கர மடத்தின் வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டுவிட்டன.183 வங்கிக் கணக்குகள் முடங்கிய நிலையில் இருப் பதால் மடத்தின் நிர்வாகம் முற்றாக ஸ்தம்பித்து விட்டது. மடத்திற்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்துவிட்டது எனத் தெரிகிறது.

எனவே இந்த இக்கட்டான நிலையைக் காரணம் காட்டித் தன் அதிகாரத்தின் கீழான நிர்வாகம் ஒன்றை அமைப்பதற்கு அதிகாரிகள் குழு ஒன்றை அமைப் பதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா முடிவு செய்துள் ளதாக தமிழகச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஜெயலலிதாவின் இந்த முடிவை பாரதிய ஜன தாக் கட்சி வன்மையாகக் கண்டித்திருக்கிறது. அக்கட் சியின் முக்கியஸ்தர் ஒருவர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் தமிழக அரசு காஞ்சிமடத்தை தன்வசம் கொண்டுவர முயல்வது இந்து சமூகத்திற்கு விடுக்கப்பட்டுள்ள சவால் ஆகும். இந்தச்சவாலை எதிர்கொள்ள சமுதாயம் தயாராக இருக்கிறது. இந்த முட்டாள்தனத்தைத் தமிழக அரசு செய்யாது என்று நான் நம்புகிறேன். காஞ்சிமடத்தை தமிழக அரசு கைப்பற்ற முயன்றால் பா.ஜ. அதைத் தீவிரமாக எதிர்க் கும் . தமிழக அரசின் அந்தச் செயலை பா.ஜ. அமைதி யான முறையில் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறது எனத் தெரிகிறது.

வி.பி.கிண்ண முக்கோண போட்டி

# மைக்கல் கிளார்க் அதிரடித் துடுப்பாட்டம்


## அவுஸ். அணிக்கு இரண்டாவது வெற்றி



அவுஸ்திரேலியாவில் நடைபெறும் வி.பி முக்கோண கிரிக்கெட் தொடரில் ஹோர்பாட்டில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் மைக்கல் கிளார்க்கின் அபார துடுப்பாட்டத்தால் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை தோற்கடித்தது.

இப் போட்டியில் முதலாவதாக களமிறங்கிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 272 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் 68 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் கஸ்பரோவிச்சின் பந்துவீச்சில் எல்.பி.முறையில் ஆட்டமிழந்தார்.சைட்அப்ரிடி 26 பந்துகளைச் சந்தித்து 56 ஓட்டங்களை விளாசினார். சல்மான் பட் 61 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்று கௌரவமான இலக்கை முன்வைத்தனர்.

பதிலுக்கு 273 என்ற வெற்றி




யிலக்கு நோக்கி ஆடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பம்முதலே பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களை



திணறடித்தது. ஆரம்ப வீரராக களமிறங்கிய மைக்கல் கிளார்க் 3 ஓட்டங்களால் தனது இன்னுமொரு ஒரு நாள் சதத்தை தவறவிட்டார் எனினும் அவரது 97 ஓட்டங்கள் அணிக்கு வெற்றியை தேடித்தந்தது.

போட்டி இடைநடுவில் மழை குறுக்கிட்டதால் 45 ஓவரில் 253 என்ற வெற்றியிலக்கு மாற்றியமைக்கப்பட்டது. அவுஸ்திரேலியா 43ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஏனைய வீரர்களான சைமன் கட்டிச் 38,பிரட்ஹொக் 30, டரன் லீமன் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களையும் பெற்றனர். இதனுடன் தொடரில் 2 வெற்றியை அவுஸ்திரேலியா பெற்றுள்ளது.

## இங்கிலாந்து ,தென்னாபிரிக்க டெஸ்ட் வெற்றி தோல்வியற்ற முடிவை நோக்கி



தென்னாபிரிக்க, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் யொகன்னஸ் போக்கில் நடைபெற்று வரும் நான்காவது டெஸ்ட் போட்டி பெரும்பாலும் வெற்றி தோல்வியற்ற முடிவைத்தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.


இங்கிலாந்து அணியின் எதிர்பார்ப்பைச் சிதறடித்த தென்னாபிரிக்க வீரர் கிப்ஸ் 161 ஓட்டங்களை குவித்து அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தார். அது அவ் அணி முதல் இனிங்சிற்காக 419 ஓட்டங்களைக் குவிக்க உதவியது.

துடுப்பாட்டத்தில் கிப்ஸ் 161, புச்சர் 64, நிக்கி போயே ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹொக்ஹாட் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 8 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாவது இனிங்சிற்காக ஆடும் இங்கிலாந்து 29 ஓவர் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களை பெற்றிருந்தது.

ரெஸ்கொதிக் ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களை பெற்றிருந்தார். அன்ருஸ்ரோஸ் ஓட்டமெதுவும்



பெறாது ஆட்டமிழந்தார். வீழ்த்தப்பட்ட இரண்டு விக்கெட்டுக்களையும் நிற்றினி கைப்பற்றினார். இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

## கென்ய கிரிக்கெட் சபைக்குள் உட்பூசல் சபையை கலைத்தது அந்நாட்டு அரசு




கென்ய கிரிக்கெட்சபையை அந்நாட்டு அரசு கலைத்துவிட்டதாகவும், வரும் ஏப்ரல் மாதம் புதிய தெரிவு நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கென்ய விளையாட்டுத்துறை அமைச்சர் ஒக்கிலோ அயக்கோ கிரிக்கெட்சபை நிதிகளைக் கையாள்வதில் மோசடிகள் நடந்திருப்பதாகவும், வீரர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையில் உட்பூசல் நடை பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

1997 ஆம் ஆண்டுக்குப்பின் முறையான தெரிவு ஒன்று நடைபெறாதிருந்ததால் பெருந்தொகைப் பணத்திற்கு கணக்குக் காட்டவில்லை என அவர் மேலும் கூறியுள்ளார்.

கென்ய அணி கடந்த 2003 ஆண் டின் உலக கிண்ணப் போட்டியில் அரையிறுதி வரை முன்னேறி அதிர்ச்சியளித்த அணியாகும்.

கடந்த வருடம் அணியின் தலைவர் மொறிஸ் உடும்பே சூதாட்டக்காரரிடம் இருந்து பணம் பெற்றார் என ஐந்து வருட தடையைப் பெற்றார். அத்துடன் அணி வீரர்கள் தமக்கு போனஸ் வழங்கவில்லை என போட்டிகளை நிராகரித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே தற்போது கிரிக்கெட்சபையை அரசாங்கம் கலைத்துள்ளதுடன் வரும் ஏப்ரலில் தேர்தலை நடத்தத் தீர்மானித்துள்ளது.

### இனாமுல் ஹக் பந்துவீச்சில் புதிய உலக சாதனை படைத்தார்



டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகக் குறைந்த வயதில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற உலக சாதனையை பங்களாதேஷின் இனாமுல்ஹக் நிலைநாட்டியுள்ளார்.

சிம்பாப்வேக்கு எதிராக டாக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்சில் சிம்பாப்வேயின் 7 விக்கெட்டுக்களை வீழ்த்திய இவர் பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் வக்கார் யூனிசின் 7 விக்கெட் (18 வயது 336 நாட்கள் நியூசிலாந்துக்கு எதிராக 1990) முறியடித்தார். கடந்த மாதமே இனாமுல்ஹக் 18 வயதை பூர்த்தி செய்திருந்தார்.

### எதிர்காலத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிகளில் இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு

— ஜாகீர்ஹான

பாகிஸ்தானுடன் எதிர்காலத்தில் விளையாடும் கிரிக்கெட் ஆட்டங்களில் இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என்று ஜாகீர்ஹான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடன் எதிர்காலத்தில் ஆடும் ஆட்டங்களில் இந்தியா வெற்றி பெறுவதற்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன. பாகிஸ்தான் சுற்றுலா செய்த போது இந்திய அணிக்கு கிடைத்த வெற்றிகள் சௌரவ் கங்குலி தலைமையிலான அணியின் உற்சாகத்தை அதிகப்படுத்தியுள்ளது.

இனி தொடர் ஆட்டங்களை நாங்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறோம். தொடர் வெற்றி கிடைப்பதற்கு நமக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. நமது ரசிகர்கள் முன்னிலையில் விளையாடுகையில் நிச்சயமாக நமது கை இன்னும் ஓங்கியே இருக்கும். உற்சாகம் அதிகமாக இருக்கும். என்றார்.





### மகேஷ் பூபதி ஜோடி சம்பியன்

ஏ.டி.பி. டென்னிஸ் போட்டி சிட்னியில் நடந்தது. இதன் ஆண்கள் இரட்டையர் இறுதிப் போட்டியில் மகேஷ்பூபதி (இந்தியா) - டுட்உட்பிரிட்ஜ் (அவுஸ்திரேலியா)ஜோடி, பிரான்சிஸ் அர்னாட் கிளமென்ட்- மிச்லோர்டா ஜோடியுடன் மோதியது. இதில் மகேஷ்பூபதி ஜோடி 6-3,6-3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று சம்பியன்' பட்டத்தை கைப்பற்றியது.

டாக்கா டெஸ்ட் போட்டி

## பங்களாதேஷ் மீண்டும் வழக்கமான ஆட்டம் சிம்பாப்வே அணி வலுவான நிலையில்




டாக்கா டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிம்பாப்வேயின் கை ஓங்கியுள்ளது.

போட்டியின் மூன்றாம் நாளான நேற்று ஆட்ட நேர முடிவின் போது இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் சிம்பாப்வே 6 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

பங்களாதேஷை முதல் இனிங்சை 211 ஓட்டங்களுக்குள் சுருட்டிய சிம்பாப்வே 87 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்தது. இதன்படி சிம்பாப்வே அணி 290 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

துடுப்பாட்டத்தில் முதல் இனிங்சில் பொறுப்புடன் ஆடி ஆட்டமிழக்காது 85ஓட்டங்களை பெற்ற அணிததலைவர் தைபு இரண்டாவது இனிங்சில் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். ரெயிலர் 78 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் மொரட்சயா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.



முன்னதாக பங்களாதேஷ் மீண்டும் ஒரு முறை தனது வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 211 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. றபீக் அதிகப் பட்சமாக 56 ஓட்டங்களைக் குவித்தார்.

சிம்பாப்வே முதல் இனிங்ஸ் 298 ஓட்டங்கள் .இன்று போட்டியின் நான்காம் நாளாகும். இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட்தொடரில் பங்களாதேஷ் முதல் போட்டியில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் மெல்பேர்னில் இன்று ஆரம்பம்




கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் மெல்பேர்னில் இன்று தொடங்குகிறது. ஆண்கள் பிரிவில் இம்முறையும் ரோஜர் பெடரர் சம்பியன் பட்டம் வெல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

டென்னிஸ் வீரர்களைப் பொறுத்தவரை அவுஸதிரேலிய ஓபன் டென்னிஸ் விசேடமானது. ஏனென்றால் இங்கு வெற்றி பெற்று ஆண்டை வெற்றிகரமாக தொடக்கவேண்டும் என்பதே இவர்கள் கனவாக இருக்கும். ஆண்கள் பிரிவில் இம்முறை சம்பியன் பட்டத்திற்கான போட்டியில் உள்ளவர்களில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அமெரிக்காவின் அன்ரி ரொடிக், அவுஸ்திரேலியாவின் ஹெவிட், அமெரிக்காவின் ஆந்தரே அகாசி ஆகியோரை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இதில் நடப்பு சம்பியன் பெடரருக்கு வாய்ப்புக்கள் அதிகம். “பெடரர் ஆட்டம் புதிய முறையில் உள்ளது. அவரை வீழ்த்துவது சிரமம்” என்கிறார் ஹெவிட்.இவர் பெடரரிடம் மொத்தம் ஏழு முறைமோதி ஓரே ஒரு போட்டியில் தான் வெற்றி பெற்றுள்ளார். இதே போல் அன்ரி ரொடிக் கூட சமீபத்தில் பெடரரை எதிர்த்து விளையாடி அனைத்துப் போட்டிகளிலும் தோல்வி அடைந்துள்ளார்.

தொடரின் மூத்த வீரரான அகாசி (வயது 34) கூறுகையில், “பெடரர் தொடர்ந்து நல்ல நிலையில் இருந்து வருகிறார். டென்னிஸ் பீட் சாம்பிராசை போல சிறந்த வீரராக இவர் திகழ்கிறார்” என்கிறார்.



## சிந்தனைக்கு

இன ஒடுக்கு முறையாலும், இராணுவ அடக்கு முறையாலும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 17-01-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
natham 23ela @ yahoo .com


## சின்னத்தனம்!

சுனாமிப் பேரலை தாக்கிப் பெரும் அனர்த்தம் நிகழ்ந்துள்ள நிலையில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் சின்னத்தனத்தையும், சிறுபிள்ளைத்தனத்தையும், கைவிட்டு மனிதாபிமானத்துடனும் பெரும் தன்மையுடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும். இதுவே ஆட்சியாளருக்கும் கௌரவம் இலங்கையின் எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கக் கூடியதாகும்.

சிறிலங்காவிற்கு ஐ.நா.வின் பொதுச்செயலர் கொபி அனான் வருகைதந்தபோது அவர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு - குறிப்பாக முல்லைத்தீவிற்கு விஜயம் செய்யவும், சுனாமி அனர்த்தத்தைப்பார்வையிடவும் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இதற்கு அனுமதிக்கவில்லை.

அதேபோன்று தற்பொழுது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள கனேடியப் பிரதமர் போல் மாட்டினும் வன்னிக்கு வருகைதர மனதளவில் விருப்பம் கொண்டவராக இருப்பினும், அதற்கான அனுமதி வழங்கப்படும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. இதன் காரணமாக கனேடியப் பிரதமர் தனது விருப்பத்தைக் கூட வெளியிடவாய்ப்பில்லாது போகலாம்.

இது ஒரு புறம் இருக்க மனிதாபிமானப்பணிகள் நிமித்தம் வன்னிப்பகுதிக்கு விஜயம் செய்ய உலக உணவுத்திட்ட இயக்குனருக்கு போக்குவரத்து வசதிக்காக உலங்குவானூர்தி கோரப்பட்டபோது முதலில் அது சிறிலங்கா அரசால் மறுக்கப்பட்டு, உரையாடலின் பின்னர் வழங்கப்பட்டுள்ளது.

கொபிஅனான், போல் மாட்டின் போன்றவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யும் போது அவை இராஜீக ரீதியிலானவையாக இருக்கும் பட்சத்தில் சிறிலங்கா அரசே அவர்களின் பயண ஒழுங்குகளை மேற்கொள்வதும், அவர்கள் பயணம் செய்ய வேண்டிய இடங்களையும் தீர்மானிக்கும் உரிமையும் கொண்டுள்ளது. இது சர்வதேச ரீதியிலான வழிமுறையாகும்.

இந்நிலையில் கொபிஅனானும்,போல்மாட்டினும் தமிழர் பிரதேசங்களுக்குச் செல்ல முடியாதவாறு அரசாங்கம் தடுத்தமை ஒப்பிற்கு இராஜீக வழிமுறைக்கு மாறான செயலில்லை. ஆனால் இது மனிதாபிமானத்திற்கும், மனித நேயத்திற்கும் மாறான செயலாகும். வேறொரு விதத்தில் கூறுவதானால் இது சமாதானத்திற்கு விரோதமான நடவடிக்கை ஆகும்.

இதேவேளை உலக உணவுத்திட்ட இயக்குனரின் வன்னி வருகைக்கு உலங்கு வானூர்தி வழங்குவதில், சிறிலங்கா செய்த இழுத்தடிப்பு மிகவும் சிறுபிள்ளைத்தனமானது மட்டுமல்ல, மோசடித்தனமானதும் கூட.

இத்தகைய அதிகாரிகளுக்கு உலங்குவானூர்திகள் வழங்க வேண்டியது அரசிற்குரிய கடமையில்லை என அரசு கூற முயல்வது, அரசு செய்யும் குதர்க்கமாகவே கொள்ளத்தக்கது. சிறிலங்கா அமைச்சர்கள் உலங்கு வானூர்திகளில் பறப்பதை விட உலக உணவுத்திட்ட இயக்குனர் பறப்பதென்பது நன்மை பயக்கத்தக்கதொன்றே.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ இவ்வாறு எதுவும் சிந்திப்பதாகத்தெரியவில்லை. அவர்களின் ஒரே இலட்சியம் உலகத் தலைவர்களையோ, அமைப்புக்களையே வன்னிக்கு செல்ல விடாது தடுத்தல் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகள் வெளி உலகிற்கு எட்டவிடாது தடுத்துவிடலாம் என அது கருதுகின்றமையே ஆகும்.

ஆனால், அடிப்படையில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இவ்வாறு தடுப்பதே இவ்விவகாரமும், இதனுடன் தொடர்பு பட்ட இனப்பிரச்சினை போன்ற விவகாரங்களும் முதன்மை பெறவும் சர்வதேசத்தின் கவனத்தையும் பெரிதும் ஈர்ப்பதற்குக் காரணமாகிறது. அத்தோடு இதன் விளைவாகவே தற்பொழுது சிறிலங்காவிற்கு வரும் ஆட்சித் தலைவர்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சம அளவில் நிவாரணங்கள் உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். மேலும், பல நாடுகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் உதவிகளை வழங்க முற்பட்டுள்ளன.

ஆகையினால் சிறிலங்கா அரசாங்கம் தனது சின்னத்தனத்தையும், சிறுபிள்ளைத்தனத்தையும் கைவிடுதல் வேண்டும். இராஜீக வழிமுறைகளுக்கு மாறானதாக இருப்பினும், கூட மனிதாபிமான செயற்பாடு ரன்ற ரீதியில் கொபிஅனானையும் போல் மாட்டினையும் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அனுமதித்திருப்பின் சிறிலங்கா அரசின் நற்பெயரும், கௌரவமும் உயர்ந்திருக்கும். நாட்டின் எதிர்காலத்திற்கும் நன்மை கிடைத்திருக்கும். ஆனால் சிறிலங்கா அரசின் சிறுமைத்தனம், அதன் மீதான அவநம்பிக்கைக்கும், அவப்பெயருக்குமே வழி செய்துள்ளது.

# அரசினதும், புலிகளினதும் நிவாரண அறிக்கைகள் கூட்டாக பரிசீலிக்க ஆசிய அபிவிருத்தி. வ முடிவு

புனர்நிர்மாண வேலைகளுக்கான நிதியுதவி வழங்குவதற்கு முன்னோடியாக சிறிலங்கா அரசினாலும், விடுதலைப்புலிகளினாலும கையளிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் கூட்டாக பரிசீலிக்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கி நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இது பற்றி அந்த வங்கியின் இயக்குநர் அலஸான்ரோ பியோ ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச் செல்வனுடன் மேற்கொண்ட சந்திப்பில் விடுதலைப்புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு தேவையான உதவிகள் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்வதில் அக்கறை செலுத்தியிருந்ததாக அவர் கூறினார்.

இதனால், தாங்கள் பாதிக்கப்பட்ட எல்லோரது தேவைகளையும் ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தோனேசியா, மாலைதீவு மற்றும் இலங்கைக்கு 675 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முடிவெடுத்திருக்கின்றது. இத்தொகையில் 500 மில்லியன் டொலர்கள் நன்கொடை பணமெனவும், மிகுதி 175 மில்லியன் டொலர்கள் வேறு திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையினை இப் பேரழிவின் நிவாரணப்பணிகளுக்கு பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்ட தனையும் அவர் தெரிவித்தார். இவ்வாறு ஒதுக்கப்பட்ட 175 மில்லியனில், 50-60 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்

# நிவாரணப் பணிகளில் சிறில. அரசு இனப்பாகுபாடு காட்டுகின்றது

### ஆசிய அ.வ.தலைவரிடம் கூட்டமைப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

நிவாரணப் பணிகளில் சிறிலங்கா அரசு இனப்பாகுபாடு காட்டுவதாக இலங்கைக்கு வருகை தந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டடா ஒசினோவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று அவரைச் சந்தித்த போது மேலும் சிறிலங்கா அரசின் தற்போதைய செயற்பாடுகள் ஒரு சனநாயகத் தன்மையை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இல்லை என்பதை வடக்கு கிழக்கு மக்கள் உணர்கின்றனர் என்றும் உலக நாடுகளின் உதவிகள் சிறிலங்கா தரப்புக்கும் தமிழீழ மக்களுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

போரினால் பாதிக்கப்பட்டு ஏதிலியராக முகாம்களில் வாடிய நிலையில் கடந்த மூன்றாண்டு அமைதி ஒப்பந்த காலத்தில் கூட மீளக் குடியேற்ற வாய்ப்புகள் நிராகரிக்கப்பட்ட மக்களே தற்போதைய ஆழிப்பேரலை அழிவிலும் சிக்கி உள்ளதாகவும் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர்.

தமிழர் தாயகப் பிரதேசம் மூன்றில் 2 பங்கு நீளமாக கடற்கரைப் பகுதி என்றும் இப்பகுதியே பாரிய சேதத்திற்கும் சீரழிவுக்கும் உள்ளாகி உள்ளதால் முதன்மை முக்கியத்துவம் இப்பகுதிகளுக்கே அளிக்கப்பட வேண்டும் என்றும் சினோவிடம் கூட்டமைப்பு வலியுறுத்திக் கூறியது.

நிவாரணப் பணிகள் கொழும்பை மையப்படுத்தி இயங்குவதாலும், இராணுவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாலும் தமிழர்களுக்குப் பாரிய இழப்புகள் ஏற்படும் என்றும், ஆழிப்பேரலை ஏற்பட்டது முதல் தொடர்ச்சியாக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனைத்து வித செயற்பாட்டையும் இந்த நடவடிக்கை கடுமையாக பாதித்துள்ளது என்றும் சினோவிடம் கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர்.

கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# இலங்கையின் நிதித்தேவை குறித்து ஜி-7 நாடுகள் பெப்ரவரியில் ஆராயும்

ஜி-7 என்றழைக்கப்படும் உலகின் 7 செல்வந்த நாடுகள், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு தேவைப்படும் உதவிகள் பற்றி கலந்தாலோசிப்பதற்கு லண்டன் நகரில் எதிர்வரும் பெப்ரவரி 4, 5ம் திகதிகளில் சந்திக்கவுள்ளன.

இக் கூட்டத்தில்,சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் அறிக்கைகளும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. இலங்கைக்கான உலக வங்கி இயக்குனர் பீற்றர் ஹரோல்ட் இது பற்றி விபரிக்கையில், இச்சந்திப்பு கடந்த வாரம் நடைபெற்ற கடன் வழங்கும் நாடுகளின் பாரிஸ் குழுவினர் மாநாட்டை விட முக்கியமானது எனவும் தாங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் பாதிக்கப் பட்ட நாடுகளின் பொருளாதார மற்றும் சமுதாய இழப்பீடுகள் பற்றிய மதீப்பீட்டறிக்கை ஒன்றினை கேட்டுக்கொண்ட அதேநேரம், உலக வங்கியிடம் இந்த இழப்பீட்டுக்களின் புனர்நிர்மாண பணிகளுக்கு தேவையான நிதி கணிப்பீட்டறிக்கை ஒன்றினை கேட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். இவ் இரண்டு அறிக்கைகளையும் கவனத்தில் எடுத்து, அதன்படி ஜி-7 நாடுகள் தங்களது பொறுப்புகள் பற்றி முடிவெடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இலங்கை மீளக் கொடுக்க வேண்டிய கடன்தொகையினை முடக்கி வைக்க கடன் வழங்கும் நாடுகளினால் எடுக்கப்பட்ட முடிவு, இலங்கைக்கு ஒரு கால அவகாசத்தை வழங்கினாலும், அத்தொகையினை என்றோ ஒரு காலத்தில் திரும்பச் செலுத்த வேண்டிய சூழ்நிலையே இருக்கின்றது.

உதாரணத்திற்கு, இன்னும் ஒரு சில வாரங்களில், கிட்டத்தட்ட 55 மில்லியன் டொலர்களை சர்வதேச நாணய நிதியத்திற்கு மீளச் செலுத்த வேண்டிய நிலை இலங்கைக்கு இருந்தது.

பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளே ஜி-7 குழுவில் அங்கம் வகிப்பவையாகும்.

# இந்தியத்தூதுவர் அம்பாறைக்கு விஜயம்

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் நேற்று அம்பாறைக்கு விஜயம் செய்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டுள்ளார்.

கல்முனை சாய்ந்த மருது, நீலாவெளி, மருதமுனை போன்ற இடங்களுக்கு விஜயம் செய்துள்ளார். அத்துடன் அம்பாறை கச்சேரியில் அமைச்சர் அஷ்ரப் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் அவர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெ.பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் இன்று சிறிலங்காவிற்கு விஜயம்

அமெரிக்க பிரதிப்பாதுகாப்பமைச்சர் போல் வூல்சன்சி இலங்கைக்கு இன்று விஜயம் செய்யவுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதிகளை பார்வையிடவுள்ளார். இவருடன் பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்க படைத் தளபதியும் வரவுள்ளார்.

# வங்காள விரிகுடா தாழமுக்கம் தொடர்ந்து நிலை கொண்டுள்ளது

வங்களா விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் தொடர்ந்திருப்பதாக வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொத்துவில் கரையோரத்திற்கு தென் கிழக்கே 500 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டுள்ளது. இதே வேளை கிழக்கு ஊவா மாகாணங்கள் மற்றும் அம்பாந்தோட்டை, நுவரெலியா மாத்தளை மாவட்டங்களில் ஓரளவு பலத்த காற்றுடன் இடைக்கிடையே மழை பெய்யுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கேணல்...

கூட்டுறவுச் சங்கங்களின் மேலாளர் மோகன் அவர்கள் மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து போராளிகளும், மக்களும் மலர் வணக்கம் செலுத்த நினைவுரைகளும் இடம் பெற்றது.

இதே போன்று எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் வணக்க நிகழ்வு கள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கிளிநொச்சி பிரதேச செயலக வளாகத்தில் விசேடமாக அமைக்கப்பெற்ற நினைவாலயத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையினரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற வணக்க நிகழ்வில் நினைவுரையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் அவர்கள் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் போராளிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதேவேளை கிளிநொச்சி தமிழீழ காவல்துறை நடுவப் பணியகத்தில் பணியக கண்காணிப்பாளர் மாதவன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ காவல துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் ஏற்றிவைக்க, நிகழ்வுகள் ஆரம்பமானது. இந் நிகழ்வில் போராளிகள், காவல் துறை உறுப் பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழீழ காவல்துறையின் குற்றப் புலனாய்வுப்பிரிவினரும் தமது பணியகத்தில் வணக்க நிகழ்வை ஒழுங்கமைப்புச் செய்து அனுஷ்டித்தனர். இதேபோன்று விசுவமடு பிரதேசத்தில் நடைபெற்ற வணக்க நிகழ்வின் ஆரம்பமாக தருமபுரம் இலக்கம் 01 பாடசாலையிலிருந்து கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் உருவப்படங்கள் பாடசாலை மாணவிகளின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன், தரும புரம் மகாவித்தியாலயத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு அங்கு வணக்க நிகழ்வுகள் அப் பிரதேச வர்த்தக சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது. இந்நிகழ்விலும் தமிழீழ காவல் துறையினர், போராளிகள், பொது மக்கள் மாணவர்கள் எனப் பெருந்திரலானோர் கலந்து கொண்டனர். பரந்தன் பகுதியிலும் விசேடமாக அமைக்கப்பட்ட நினைவாலயத்தில் இம்மாவீரர்களின் நினைவு நிகழ்வு சிறப்புற நடைபெற்ற இதேவேளை மன்னார் சாந்திபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் மாலை 5 மணிக்கு நினைவு நிகழ்வுகள் ஆரம்பமாகி சிறப்புற அனுஷ்டிக்கப்பட்டன. சிறிலங்கா இராணுவத்தின் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் நடைபெற்ற இந்நிகழ்வில் போராளிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

கேணல் கிட்டுவின் 12 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று மாலை 5.30 மணிக்கு நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கேணல் கிட்டு பூங்காவில் யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செழியன் தலைமையில் இடம் பெற்றது.

(45,27,18,14,41,சோ)

## அமெ...

அறிவித்திருக்கவில்லை என்றாலும் இலங்கையில் உள்ள அமெரிக்க கட்டளைத் தளபதியே இலங்கையின் எந்தப் பகுதிகளில் அமெரிக்கப் படையினர் பணியாற்ற வேண்டும் என்பதை தீர்மானிப்பார் என அமெரிக்க ராஜாங்க செயலர் கொலின் பவல் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த வேளையில் குறிப்பிட்டிருந்தமை இங்கு நினைவுக்கூரத்தக்கது. (32)

## கேணல் கிட்டு...

தலைவருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சம்பவம் நடைபெறவிருந்த இடங்களி[illegible]றிலங்கா இராணுவமும், பொலிசாரும் மக்களை அங்கிருந்து பலவந்தமாக விரட்டிய[illegible]ர்ணீாப் புகைக்குண்டுகளை வெடிக்கவைத்து மக்களை திகிலடையச் செய்து க[illegible]ள்ளனர். இந்த அநாகரிகமான செயல் மக்கள் மீது திணிக்கப்பட்ட போர் உபாய[illegible]ம். இது ஒரு போர் நிறுத்த மீறலாகவே மக்கள் வெளிப்படுத்துகின்றனர். அமைதி[illegible]ா சூழல் எமது மண்ணில் ஏற்படவேண்டுமென மக்கள் காத்திருந்த கடந்த மூன்று வரு[illegible]ளுக்கு மேலான காலப்பகுதியில் இப் பிரதேசங்களில் மாவீரர் நினைவான எழுச்சி நாட்களில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு எழுச்சிகரமான நிகழ்வுகள் நடைபெற்று வந்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் மட்டும் இராணுவமும், பொலிசாரும் இவ் அடாவடித்தனங்களைச் செய்வதால் மக்களது உணர்வுகளை, உரிமைகளை மதிக்காத செயலாக கருதுகின்றோம். இதனை தங்களின் கவனத்திற்கும் நடவடிக்கைக்கும் வெளிப்படுத்துகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

## புலிகளின்...

தரித்து நின்றதை உளவு விமானம் படம் பிடித்துள்ளதைக் கண்ட படையினர் அதனை மீண்டும் அடுத்த நாள் வியாழக்கிழமை வன்னிவான் பரப்புக்கு மேலாக பறக்கவிட்டுள்ளனர். அப்போது அதே ரகமான [illegible]னால் உ[illegible]நவத்தில் வேறுபட்ட இன்னொரு விமானமும் அங்கு தரித்து நின்றதை உ[illegible]வு விமானம் படம்பிடித்துள்ளதாக விமானப்படையினர் தெரிவித்துள்ளனர். புலிகளிடம் விமானம் உள்ள விவகாரம் தற்போது பாதுகாப்பு அமைச்சுக்கு உறுதியாகிவிட்டதால் இது குறித்து என்ன நடவடிக்கை என்பது தொடர்பில் தீவிரமாக இறங்கியுள்ளதாகவும் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி புரிய சிறிலங்காவில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டு இராணுவத்தினருக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டும் அவ் இணையத் தளச் செய்தி கூறுகிறது.

## பாரிய...

தொடர்ந்து மீள் குடியேற்றவேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் உதவியையும் நேரடியாகக் கேட்டி ருந்தோம். அந்தவகையில் தற் பொழுது ஐ.நா அமைப்பினுடைய உயர்மட்டப் பிரதிநிதிகளும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளும் இங்கே வருகை தந்து எங்களுடன் கலந்தாலோசிக்கிறார்கள். என்ன தேவைகள் உள்ளன. எதை முதலில் செய்ய வேண்டும். என்பதைப் பற்றிய கருத்துக்களை அவர்கள் எங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். தொடர்ச்சியாக எங்களுடைய மக்களுக்கான மனிதாபிமானப் பணிகள், நிவாரணப் பணிகள், மீள்கட்டுமானப் பணிகள் என்வற்றை முன் னெடுப்பதற்கான வேலைத்திட்டங்களாகத் தான் இந்தச் சந்திப்புக்கள் அமைந்திருக்கின்றது.

*** உலக உணவுத்திட்டம் நிவாரண உணவுப் பொருட்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ச்சி யாக வழங்கி வருகிறது. சுனாமியின் பின் இது எத்த கைய பங்களிப்பை வழங்கி வருகிறது?**

அதாவது ஏற்கனவே யுத்த நெருக்கடி காலத்திலும் ஐ.நா வினுடைய கட்டமைப்புக்கள் எங்களுடன் இணைந்து பணியாற்றி இருக்கின்றன. அவை சிறப்பாக இருந்தது. அதிலும் குறிப்பாக உலக உணவு ஸ்தாபனம் யுத்த காலத்திலும் இந்தப் பணிகளை சிறப்பாக செய்திருந்தது. தற்போது சுனாமி இயற்கை பேரனர்த்தத்தால் எங்கள் மக்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்த நிலையில் அவர்கள் தமது பணியை மேலும் அதிகரித்திருக்கிறார்கள். உணவு நிவாரண விநியோகங்களை இன்னும் விரிவாக்கம் செய்திருக்கிறார்கள்.

*** இடம் பெயர்ந்தவர்கள் இப்போது தற்காலிகமான இடங்களுக்கு அனுப்பி வைக்கப் படுகிறார்கள். அதேபோல பாதிக்கப்பட்டு பயம் காரண மாக இடம் பெயர்ந்தவர்கள் தங்கள் சொந்தவீடு களுக்கு திரும்பி இருக்கிறார்கள். அவர்களுக்கு உலக உணவுத்திட்டம் நிவாரணம் வழங்குகிறதா?**

நிச்சயமாக வழங்குகிறது. எல்லா இடங்களிலும் முழுமையாக பாதிக்கப்பட்ட மக்கள், பாதிக்கப்படாத மக்கள் என அனைவரும் தொழிலை இழந்து தொழில் முயற்சிகளை இழந்து, முழு அளவில் இழப்புக்களை சந்தித்திருக்கிறார்கள். நேரடியான அழிவுகளையும் இழப்பையும் சந்தித்து ஒரு தொகுதி மக்கள் இருந்தாலும், தொழில் முயற்சிகள் முடக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்கள் என்றும் பெருமளவானவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்குமே உலக உணவு ஸ்தாபனம் நிவாரணங்களை வழங்கி வருகின்றது.

***சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்கிற நடவடிக்கைகளுக்கும் விடுதலைப்புலிகளால் மேற்கொள் கின்ற நடவடிக்கைகளுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?**

இதுவரை இல்லை. அதாவது தற்பொழுது அரச அதிபர்கள் ஊடாக ஓரளவு நிவாரணப் பொருட்களும் ஓரளவு உதவிகளும் வந்தடைந்திருக்கிறதே தவிர சர்வதேச சமூகம் வழங்கியிருக்கிற பாரிய உதவிகள் எதுவும் எங்கள் தாயகப் பிரதேசத்தில் இருக்கின்ற மக்களுக்கு தரப்பட்டதாகவோ அல்லது பகிர்ந்தளிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் ஆக்க பூர்வமான முறையில் செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை.

*** செயலணிக்குழுவில் விடுதலைப்புலிகள் அங்கம் வகிப்பார்கள் என்று சந்திரிகா அறிவித்திருக்கிறார். இதில் ஏதாவது உண்மை இருக்கிறதா?**

இது வெறும் அறிவிப்புக்கள் மாத்திரமே தவிர அதற்கான நடைமுறை ஒழுங்குகள், ஏற்பாடுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

***. அரச தரப்பில் ஜயந்ததனபால பேசும் பொழுது தெரிவித்திருக்கிறார். விடுதலைப்புலிகளின் சமாதா னச் செயலகத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நெருங்கிய! தொடர்பு ஏற்படுத்தப்பட்டு நெருங்கிய அளவில் ஒத்துழைத்து செயற்படுவதாகவும் கூறியி ருக்கிறாரே?**

சமாதானச் செயலகங்கள் இன்று நேற்றல்ல தொடர்ச்சியாக தொடர்புக்ளை ஏற்படுத்தி வருவதால் தான் யுத்த நிறுத்த உடன்பாடு சமாதான முயற்சிகள் கடந்த காலங்களிலும் கொண்டு செல்லப்பட்டது. அதேபோல யுத்த நிறுத்த உடன்படிக்கை செம்மையாக நடைமுறைப்படுத்த கண்காணிப்புக்குழுவோடும் சமாதானச் செயலகங்கள் இரண்டும் தொடர்புகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. இந்த விடயத்தில் தொடர்[illegible]ள் இருந்தாலும் ஆக்கபூர்வமான நடைமுறை ஒழுங்குகள் எ[illegible]வும் ஏற்படுத்தவில்லை என்று தான் நினைக்கிறேன். கள யதார்த்தமும் இது தான். நிலைமைகளை நேரடியாக நீங்கள் பார்த்தால் அதை நீங்கள் உணர முடியும்.

*** தென்னிலங்கையில் வெளிநாட்டுப்படைகள் மீட்[illegible] நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் மீட்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளார்களா? இது பற்றி நீங்கள் ஏதும் கோரிக்கை விடுத்திருக்கிறீர்களா?**

எங்களைப் பொறுத்த வரையில் மீட்பு நடவடிக்கையில் எப்படிச் செயற்பட்டோம் என்பது உங்களுக்கே தெரியும். அனர்த்தம் நடைபெற்று அரைமணி நேரத்துக்கிடையில் எங்களது படைக்கட்டமைப்புக்கள் அனைத்தும் களத்தில் இறங்கி விட்டன. இது எங்கள் தேசியத் தலைவரின் விசேட பணிப்பிற்கமைவாக சகல கட்டமைப்புக்களுமே செயலில் இறங்கி கணிசமான பகுதிகளில் மீட்புப் பணி நிறைவடையும் தறுவாயில் இருக்கிறது. ஆகவே எமது முழுவளம், பலம் அனைத்தையும் ஒன்று திரட்டி மிகச் சிறப்பாக முதற்கட்டப் பணிகளை முடித்திருக்கிறோம். தெற்கிலும், சில இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் அதாவது அவர்களது இறுக்கமான பகுதிகளில் தான் இந்த வேலைகள் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்படாது நிறைவடையாமல் இருக்கிறது. அந்த இடங்களில் சர்வதேச சமூகத்தின் உதவிகளுடன் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். எங்களது பிரதேசத்துக்கு ஆளணி பலம் மக்களின் ஒத்துழைப்பு எல்லாம் அதிகளவில் இருந்ததால் அந்தப் பணிகளை நாங்கள் சிறப்பாகச் செய்து வருகிறோம். நாங்கள் ஏனைய சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து தொழில் நுட்ப உதவிகளையும் உபகரண உதவிகளையும் கேட்டிருந்தோம். சில இடங்களில் அவற்றைச் செய்திருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு நாங்கள் தொடர்ந்து அந்தப் பணிகளை ஆற்றி வருகிறோம்.

*** யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் இப் பொழுதும் அரச ஊடகங்கள் தொடர்ச்சியான பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறது இது பற்றி?**

இதற்கான பதிலை நீங்களே கூறிவிட்டீர்கள். தொடர்ச்சியாகவே அரச ஊடகங்கள் தெற்கில் உள்ள ஊடகங்களின் வழமையான காரியங்களும் பணிகளும் இவைதான். எங்கள் மக்கள் அவலப்பட்டு மனிதாபிமான நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கின்ற போதெல்லாம் மக்களைக் குழப்புகின்ற நோக்கத்தோடு அவர்களின் உணர்வை மதிக்காது செயற்படுகின்றமை அவர்களின் வழமையான வேலை.

***.இயற்கை அனர்த்த முகாமைத்துவ செயற்பாட் டில் தேசிய மட்டத்தில் செயலணி அமைக்கப்பட வில்லை அல்லது விடுதலைப்புலிகளை அரசு சேர்க்க வில்லை என கூறினீர்கள் அதில் நீங்கள் மாவட்ட மட்டத்தில் செயற்படுகிறீர்கள். இதில் அரச சமா தானச் செயலகம் உங்களுடன் ஏதாவது தொடர்பு கொண்டு செயற்பட்டு வருகிறதா?**

இப்போதுள்ள உடனடிப்பிரச்சினை சர்வதேச பாரிய உதவிகளை எப்படி தமிழர் தாயகப்பகுதிகளுக்கு பகிர்ந்தளிப்பது என்பது தான். இது சம்பந்தமான கோரிக்கைகளை நாங்கள் தொடர்ந்து விடுத்து வருகிறோம். இதுவரை அரசாங்கத்திடம் இருந்து சாதகமான நடைமுறை, சாத்தியமான பதில்கள் எதுவும் வராத நிலையில் சர்வதேச சமூகத்துடன் தொடர்ச்சியான சந்திப்புக்களை மேற்கொண்டு வருகிறோம். சர்வதேச சமூகம் இதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இது எங்கள் மக்களின் உடனடி அவசர மனிதாபிமானத் தேவை. யுத்தத்தின் போதும் 20 வருடங்களாக அழிவைச் சந்தித்தவர்கள் எங்கள் மக்கள். அவர்களை இப்போது இயற்கை அனர்த்தமும் தாக்கி பாரிய அழிவைச் சந்திக்க வைத்துள்ளது. இந்தக் கட்டத்தில் இது பெரு மனிதாபிமான தேவை. அந்த வகையில் சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களுக்கு உடனடியாக உதவிபுரிய முன்வர வேண்டும் என்பது தான் எங்களது உடனடிக் கோரிக்கையாக இருக்கிறது.

***. மக்களுக்கு என்ன தேவை?**

மக்கள் ஒரு பெரிய மனிதாபிமான நெருக்கடியை சந்தித்து நிற்கிறார்கள். அவர்கள் இருப்பிடம், உறவினர், தொழில் உட்பட அனைத்தையுமே இழந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கான அனைத்தையும் செய்ய வேண்டியவர்களாக நாங்கள் இருக்கிறோம். அது சம்பந்தமான திட்டமிடல்கள் தேவை மதிப்பீடுகள் தீவிரமாக நடைபெற்று வ[illegible]கிறது. இவற்றை வைத்துக்கொண்டு சர்வதேச சமூ[illegible]கத்துடன் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். மூன்று கட்டப் பணிகளாக எங்கள் வேலைத்திட்டங்களை வ[illegible]ிருக்கிறோம். ஒன்று அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட [illegible]ான உடனடி மனிதாபிமானப் பணிகள், மக்களைப் பா[illegible]ப்பான இடத்துக்கு கொண்டு வந்து அவர்களுக்கான உணவு, உடைகள் என்பவற்றை வழங்கி அவர்களுக்கு ஆறுதல் அளிப்பது மருத்துவ ரீதியாக உதவிகளை செய்வது குழந்தைகள், மக்களுக்கான உளவியல் மேம்பாட்டுக்கான வேலைகளைச் செய்வது. இதன் முதற்கட்டம் நிறைவடையும் நிலையிலுள்ளது. இரண்டாவது நிலைக்குத் நாங்கள் வந்துவிட்டோம். இப்படி வேகமாக வேலைகள் இங்கு தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதாவது பாதுகாப்பான இடங்களில் தற்காலிக குடியிருப்புக்களை அமைத்து சுகாதார வசதிகளுடன் அவர்களை குடியமர்த்துவது. குறிப்பிட்ட காலம் அவர்களுக்கு அங்கு ஆறுதல் அளித்துவிட்டுமிக முக்கிய பணியாக மீள்குடியேற்றம், அவர்களது இருப்பிடங்களில் குடியிருப்புக்களை அமைத்து பாதுகாப்பான ஏற்பாடுகளுடன் தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வருவதுதான் எமது மிக முக்கியமான இலக்கு. இதில் தான் எமது தலைமைப்பீடம் மிகுந்த கரிசனையுடன் இருக்கிறது. இதற்கு இதுவரை எமது புலம் பெயர் மக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக ஆற்றிய உதவிகள் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களின் பங்கு என்பன இ[illegible]வரை ஆற்றிய பணிகளுக்கு பெரும் உதவியாகவிருந்தது. இனி வரப் போகும் பணிகள் தான் எமக்குப் பெரும் சவால் நிறைந்ததாக இருக்கப் போகிறது. பாரிய பொருளாதார உதவியுடன்தான் அவற்றை முன் னெடுக்கலாம். அதற்கு சர்வதேச சமூகத்தின் நேரடியான உதவிகளை கோரி நிற்கின்றோம். நிச்சயமாக மனிதாபிமானத் தேவை என்ற அடிப்படையில் இந்த உதவிகள் தங்கு தடையின்றி வரும் என்று நான் நம்புகின்றேன்.இதற்கும் இலங்கை அரசாங்கம் தடைவிதித்தால் எங்கள் மக்களுக்கு பெரும் அதிர்ச்சியையும், நெருக்கடியையும் ஏற்படுத்தும் என்றுதான் நான் நினைக்கின்றேன்.

***.கனடா நாட்டுப் பிரதமர் வன்னிவருவாரா?**

இது சம்பந்தமாக உத்தியோகபூர்வ தகவல்கள்எதுவும் கிடைக்கவில்லை. அவர் குறுகிய நேரமாகையால் இங்கு வருவது சாத்தியமில்லை என்றும் அம்பாறைக்கு மாத்திரம் செல்வார் என்றும் ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம்.

***.இந்த அனர்த்தத்தின் பிறகு அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நம்பிக்கை ஏற்படுவதற்கான வாய்ப்பு நழுவிவிட்டதாக சிலர்கரு துகின்றனர்?**

சிலர் கருதுகின்றனர் என்றல்ல எல்லோரும் கருதுகின்ற நிலமை உருவாகி இருக்கிறது. ஏனெனில் எல்லோருக்குமே எமது தலைமைப்பீடம் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தது. இது மனிதாபிமான நெருக்கடி மனிதப் பேரழிவு. இதில்இருந்து மீள்வதற்கு எங்களுடன் இணைந்து அரசாங்கமும் பணியாற்ற வேண்டும் என நேசக்கரம் நீட்டி இருந்தோம். ஆனால் அரசாங்கம் ஆரம்பத்தில் சாதகமான அறிக்கைகளை வெளியிட்டதே தவிர நடைமுறை சாத்தியமான எந்த ஒழுங்குகளையும் ஏற்படுத்திக் கொள்ள முன்வரவில்லை. வழமை போலவே அறிக்கைகளாகவே அது போய் இருக்கிறது. நம்பிக்கையைக் கட்டி எழுப்புகின்ற செயற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை என்றார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் ஐ.நா உலகத்திட்டப்பணிப்பாளர் ஜேம்ஸ் மொறிஸ் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர். தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா உட்பட்டோர் கலந்துகொண்டனர். மேற்படி சந்திப்பு 40 நிமிடம் வரை நீடித்தது. உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த உலக உணவுத்திட்டப் பணிப்பாளர் அடங்கிய குழுவினர் 155 ஆம் கட்டையில் அமைந்துள்ள உலக உணவுத்திட்ட அலுவலகத்துக்கு சென்று விட்டு மீண்டும் உலங்குவானூர்தி மூலம் மதியம் 12.10 மணிக்கு கொழும்பைச் சென்றடைந்துள்ளனர். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது